ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம,

பத்திராசல.

ராமதாஸ் சரித்திரக் கீர்த்தனை

ஸ்ரீமான்
சின்னசாமிசாஸ்திரியார்
அவர்களால் இயற்றப்பட்டு

இஃது
சுப்பிரமணியசுவாமிகளால்
பார்வையிடப்பட்டு

திருமயிலை.
திருவேங்கடமுதலியார்
அவர்களது
வாணீவிலாச அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

1915

தாண்டவராயப்பிள்ளைதெரு நெ. 11

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம

சாத்துகவிகள்

—(*)—

புரசை

அஷ்டாவதானம்

சபாபதிமுதலியாரவர்கள்

இயற்றிய.

கழிநெடில் விருத்தம்

இன்புறுபத்திகாரணமாக
 விறைவனையுளமிசையிருத்தி
யன்புயர்முத்திக் கணியனுமிராம
 தாசன்றனருட்பெருஞ்சரிதை
மன்பதையுணர்வான் கீரத்தனையாக
 வனைந்தனன் கச்சியம்பதிவாழ்ப்
பொன்புனைமதிசூழ் குத்தனார்ச்சின்ன
சாமியாம்பூசுரன் மாதோ

மா-ள-ஸ்ரீசென்னை

சர்வகலாசாலைத் தமிழ்ப்பண்டிதர்

கோ இராஜகோபாலபிள்ளை

அவர்கள் இயற்றிய

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்

சிரந்தருமூணுகர்மிக்கட்டேவுமென்கட்
 டேவுபோராயிரங்கட்டேவுமல்லார்
வரந்தருநான்மறைசூடணிபரமன்செங்கண்
 மாலென்னுமெய்ம்மையுளம்வலித்தேனேர்க்கும்
திரந்தருவான்றெரிச்கலுறு கின்னசாமித்
 திருப்பெயர்பெருமான் ராமதாச
தரந்தருவான்சரிதங்கீர்த் தனமாவிங்குத்
 தந்திட்டானங்கண்மனக் குவந்திட்டானே

ம-ா-ா-ஸ்ரீ
பிரபன்ன வித்துவான்
காஞ்சீபுரம்

இராமசாமிநாயுடு அவர்கள்

இயற்றிய
எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

பின்னுமறைமுடிப்பொருளைப் பத்தியென்னப்
  பகர்வலையிலகப்பட்டுப் பான்மையாலே
யின்னலறுமுத்தியுற்ற ராமதாச
  னெனும்புனிதன்சரிதைதனைக் குத்தனூர்க்குத்
தென்னமரவந்தசின்ன ஸாமிவிப்ரன்
  றேசமர்சீர்த்தமைக்திச் செகத்தோர்காம
மன்னனைச்செற்றி ராமதாஸர் களாய்த்தூய
  வைகுந்தமெங்துமா வழங்கினனே

—*—

ம-ா-ா-ஸ்ரீ
புரசை அஷ்டாவதானம்
சப்ாபதிமுதலியாரவர்கள் மாணக்கரும்
பரீசங்மிஸன்காலேஜ்தமிழ்த்தலைமைப்புலவரும் ஆகிய
ம-ா-ா-ஸ்ரீ

திருசின்னசாமிபிள்ளையவர்கள்

இயற்றிய
எண்சீரடியாசிரிய விருத்தங்கள்

மேருபுரிதவமகவாம் பத்ராசைல
  மீதுஜானகிவல்லிபட்டிராம
தாருவெழிலருட்களியைக்கபீருதாசன்
  தன்னுரையாஞ்செக்நெறியேசென்றுதுய்க்கு
சீருறுகோ,பன்னவா மிராமதாசச்
  செம்மலின்னெண்சரிதமெலி துணர்ந்துமுத்தி

தாரணியோருறும் வண்ணஞ்சின்னசாமி
தநகனுடைத்தமிழாற்சாற்றினனால்
விப்பிரர்தங்குலமணியாஞ்சின்னசாமி
வித்தரனுலைசவரையு மறுவ ரக்கிச்
செப்பருசீர்த்திருமாலின்சரிதமென்னுஞ்
செழுந்தேனையன்பருக்குப்புகட்டுந்தூயோன்
ஒப்பில்புகழ்மேவுமெழில்ராமதாச
னெண்சரிதனைத்தமிழ்நாடகத்தமைத்தான்
இப்புவியோர்பேடறவிதயத்துன்னி
யிவ்வரியவுதவிக்குக்கைம்மாறுண்டோ

ம-ா-ள-ஸ்ரீ

வித்வான்

காஞ்சீபுரம்

இராமானுஜபிள்ளை யவர்கள்

இயற்றிய

எழுசீரடியாசிரியவிருத்தங்கள்

உலகினிலுயிரி லுணர்வினிலுணர்த்து
மூத்துமாசிரியரினியலில்
இலகுவிகத்தெருப்பாணவ்வப்பேர்நடுவே
இணைமுத்தினைநாடுபுறவியற்றி
நலமுறுஞ்சின்னசாமிபேர்கொண்டென்
நாணிலங்குத்தனூருறைவோன்
அலகில்சீரிராமதாசர்தஞ்சரித்
தருளின்னடியர்வாழ்வுறவே
திருவளர்ராமதாசர்தஞ்சரிதக்
கீர்த்தனம்புவியினிற்றிகழ
மருவளர்கமலமாலேவெய்சின்ன
சாகுமால் வருத்தனைனைதனே
உருவளர்ராமக் கிருட்டினனென்னு
மூத்தமனநுழைவயற்புகைதீர்
குருவனர்நிதமாணிக்கவேளச்சிற்
குதவுறவியற்றினன் மாதோ

ம-௱-ஶ்ரீ

திருமயிலை

சண்முகபிள்ளையவர்கள்

இயற்றிய

ஆசிரியச்சந்தவிருத்தம்.

இருக்குலிருக்குமுத லாலின்மற்றதனி
னிரும்பொருளேழுமுதலெண்
ணியம்பிடுமின்றிருநீர்ப்
பெருங்குமலியகிலமந்தப்
பெருங்கருணைப்பிழப்பைப்
பெரிதடையுங்கோசன்னைப்
பிரபலகாதையுனைச்
சருக்கரையுந்தீம்பாலுங்
கைப்பச்சைசெந்தமிழ்கீர்த்
தணவடிவாயெம்மனோர்
தமக்கருளிச்செய்தான்
தருக்கண்மலிதருபொழில்சூழ்க
குத்தனூர்ச்சின்ன
சாமியெனப்புவிபுகழ்ந்
தணரகுலமாமணியே

சாத்துகவிகள்.

முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீமான்

சின்னசாமி சாஸ்திரியாரவர்கள்

சிஷ்யராகிய

ம-ா-ா-ஸ்ரீ

திரிசிரபுரம்.

இராஜகோபாலுநாயுடு

அவர்களாலியற்றிய

முகவுரை.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

ஸ்ரீபக்தவத்ஸலனுகியும் ஸ்ரீபக்தபரா தீனனுகியும் ஸ்ரீஸ்வயம் ப்ரகாசபரம் சோதிர்மயபரா மாத்மஸ் வரூபியாகியும் ஸர்வலோகஸஞ்ஜீவன பரமபுருஷார்த்தமாகியும் வேதவேதாந்தோ பஷத்வாகிய ப்ரதிபாத்தியனுகியும் ஸத்வாஜஸ்தமோகுண சூன்யனுகியும்ப்ராகிருதிஸம்பந்தமான இச்சத்வாதி குணத்தரங்களுள்ள த்ரிமூர்த்திஸ்வரூபமாய் மாயமோஹித சித்தர்களுக்கு ப்ராந்தியினுற் றோன்றுகின்றவனுகியும் சுத்தஸத்வீக விலக்ஷணக்ஞானஸாதுசஜ்ஜனமனோரஞ்சன நிதயக்கியாகந்தமாகியும் தோன்றல்மறைதல் குவிதல் விரிதல் முதலியவிகாரமில்லாது தன்னிலேதானுயிருக்கின்ற பராபரவஸ்துவாகியும் ஸம்ஸார அபார ஸம்ஸார பாராவாரகரையாகியும்ஸமாதுதிகா ஸத்துகரையாகியும் தன்னிலும்வேரானதொன்றில்லாததானெல்லாவற்றிற்கும் வேறுனவனுகி அவாகமானபி கோசரனுகின்ற ஸ்ரீமந்நாராயணனென்னும் சக்கரவர்த்தி திருமகன்.

வைதேஹிஸகிதம்ஸுரத்ருமதலே ஹேமேமஹாமண்டபே
மத்தியபுஷ்பகமாஸனேமணியே விராஸனேஸுஸ்திதம
அக்ரேவாசயதிப்ரபஞ்சனஸுதேதத்வம்முனிப்யாபரம்
வியாக்யாந்தம்மலதாபி பரிவாதம் ராமம்பஜேஸ்யாமளம்.

என்னும் ஸ்ரீமத்ப்ரமஹம்ஸபரில் ராஜகாசாயசங்கர பாதஸ்வாமிகளாகிய ஆதிசங்காரசார்யஸ்வாமிகள் அருளிச்செய்தஸ்ரீராமகர்ணாமிர்தார்த்தமான இந்தஸ்லோக தாத்பரியத்தின்படியே ஸ்ரீவைகுண்டத்தில் திவ்யதிருமாமணிமண்டபத்தில் சீதாலக்ஷ்மண ப்ரதஸத்ருக்கஸஹிதரா யெழுந்தருளியிருக்க இந்த ஸ்ரீராம பரப்ரம்ஹ மூர்த்தியின் சந்நிதியிலுள்ள நித்யமுக்தர்களான முநீஸ்வர்களின்பொருட்டு ஸ்ரீஆஞ்சநேயமூர்த்தி பாத்தவத்தை வெளியிட்டுக் கொண்டிருக்குங்காலத்தில் ஸ்ரீபக்தவிஜயகரந்த ப்ரமாணானுகாரமாய் இகலோகத்தில் பெருமைதங்கிய வனத்தில் அருமையுள்ள ப்ரமஹ நிஷ்டையிலெழுந்தருளிய சகலரிஷிகளும் சுவர்க்கலோகவாசிகளான தேவர்களுடன்சென்று கல்பவிருக்ஷநிழலில் வீற்றிருக்கும் ஸர்வோதிகிருசடனாகிற ஸ்ரீஹரிபரந்தாமனை வலம்வந்துபணிந்து மனோவாக்கு காயங்களைத்தங்கள்வசப்படுத்தி, ஓ ஆதிநடுமுடிவில்லாது ஆதிபுருஷனான ஸர்வஸ்வரூபியே ப்ரவைகாந்திகள் தங்களுத் தமக்ஞானத்தினால் ஸ்ரீ ஆயிக்கத்தக்க அஷ்டாக்ஷரப்பரதிபாத்யனான ஸ்ரீ வாசுதேவனே ஓ எங்கள் ஆராவமுதமே உமக்குத்தெண்டன் சமர்ப்பிக்கின்றோம் என்றுவெகுவிநீதமாய் அந்தரங்கபக்தியாரந்தாதிசயத்தோடு துதித்து தங்களை மறந்துடித்திரதீபம்போ லசையாமனிற்கின்ற ஸ்ரீ எம்பெருமான் குளிரக்கடாக்ஷித்து ஓரிஷிகளே தவர்களே உங்களுக்குற்றது யாதுஎன்னிடத்திலென்னபெறக்கருதியிவண்வந்தீர்களோ அதைச்சொல்லுங்களென்றும் இனியுங்கள் மனோசலங்களை வெல்லுங்களென்றும் அருளிச்செய்யவே சகலரும் அளவிலாசந்தோஷ பரிதர்களாய்அலர்ந்ததங்கள் திவ்யநேத்திர பங்கஜங்களில் நின்றும் ஆனந்தபாஷ்பங்கள் தாரைதாரையாய்ப் பெருகி ஸ்ரீபகவத்திவ்விய சரணகமலங்களில் திருமஞ்சனநீர்போற் பாவ பரமஸாநந்தஸாகர மக்னர்களானதினால் சொற்கள் குழற நமோச் ஞானஸ்வரூப ஸ்ரீமந்நாராயணா ஆஸ்ரிதஜனதயாபாராயணா நமோநமோ அகிலகாரணா ஸர்வபரிபூரணா நமோநமோ ஹரீ ஹரீ நாஹரீ முராஹரீ என்னும் இதய திலஸ வமதஸம்மதஸ்கிருதி வாக்கியங்களாகும் சுகந்தமலர்களால் நீர்ஸர்வ வியாபகன் உன்னிடத்தில் ஸர்வமும் நிற்கின்றது. அன்றியும், ஸர்வ வல்லவனும் நீயே ஆதலால், ஸகலமும் அறிகின்றாய். ஆகையால், யாது காரணத்தை

ப்பற்றி யெங்களையிங்ஙுவரும்படிச்செய்தீரோ அதைமுழுதும்நீயே
அறிவாய் ஆதலால்நாங்கள் விண்ணப்பஞ்செய்வானேன் ஆயினும்
நின்றபிரயோஜனம் உல்லங்கனம் செய்யப்படாதாகையால் விண்ணப்
பஞ் செய்கிறோமெனச் சொல்லத்தொடங்கினார்கள்.

ஓ ஆபத்பாந்தவனாகிய ஸ்ரீ ஹிருஷீகேசனே பூலோகத்தில்
ஞானமயமாகும் ஆத்மஸ்வரூபமே தாங்களென் றுணர்ந்து ஸ்ரீ அச்
சுதனாகும் நின்னை யனுபவிக்கத்தக்க யோகநிலைக்கு யோக்யமான
நிர்மலாந்தக்கரணமும் வேதசாஸ்திரங்களா லுணரப்பட்ட சதாசா
ரமுமுடைய நினங்களுக்கு கலிகளேஹக்கவந்தால் ஸ்வபாவத்தினுண்
டாகத்தக்க ஜீவகாருண்யம் பொருமைமனஊக்கம் ஐம்பொறியடக்
கல்முதலிய நற்குணங்கள் குறைந்துபோயின அதனால் பரிசுத்த
மான ஹிருதயத்தில் ராகத்வேஷாதிதோஷங்களென்னும் புழுதிபடி
யஅவர்கள் பரலோகசாதனங்களான தானத்வயக்ய யாகாதிஸ்த்
ருமங்களின் ப்ரீதியற்றவராயினர் அதனால் மேகம அற்பமான ம
ழையைப் பொழியும்படி நேரிட்டது அதனால் எல்லாப்பயிர்களும்
செழித்துவளர்தல் தவிர்த்தன அதனால்எங்கும் பஞ்சமுதலிய பல
விததுன்பங்களுண்டாக ஜனங்கள் பசிபிணியினாற்சேர்ந்தவர்களாய்
ஒருவரையொருவர் விசுவாசிக்காமல் கொலைகளவு கள் காமம் குரு
நிந்தை என்னும் பஞ்சமாபாதகங்கள் முதலிய அக்ரமச் செய்கை
களையே செய்துவருங்காலத்தில்ஜனித்தனு யாசுததசயும்கூடிய துயி
ரிவையும் உலர்ந்தது தாவையும்பெறவேண்டியதாகையால் சூர்யசந்
த்ரவம்ச ராஜாக்கள்முதலிய பரிபூரணனுக்கிரகம்வைத்திருந்த ஸ்த
லராஜாக்களிடத்தி னின்றும் தேஜோபலத் தைரிய வீரயாதி மஹி
மைகளெல்லாம் தூரமாய்ப்போயின போகவே மிக்ககோபமும் கடி
னெஞ்சமும் அக்ருமத்திற்பதிந்த மனமும் கொல்லுங்கையும் துரா
சாரமுடையமிலேச்சர் முதலானவர்கள் ராச்சியம்பெற்று அஹகங்
காரமிகுதியால் எங்கும் மதயானைகளைப்போலோடி தங்களைப்போ
ன்ற தீயொழுக்க முள்ளவர்களையேகூடி மண் பெண் பொன்னாசை
யென்னுங் கள்ளையுண்டு மதிமயங்கி இதுசெய்யத்தக்கது இதுசெ
ய்யத்தகாததுஎன்று பகுத்தறியும் விவேகசூன்யராய் ஆலயங்களையி
டித்தும் பட்டணகிராமங்களிற கொள்ளையடித்தும் நாகருணுபரண
ம்பூண்டுஇவர்களுடைய பூர்வீகராகிய அநேகவரசர்கள் எவ்விதபா
டுபட்டும் கூடகொண்டுபோகச் சக்தியரியததிராபொறியாய்விட்டுப்
போன க்ஷேத்திரங்களைத் தங்களுக்கும் தங்களுடைய மக்களுக்
கும் வசப்படுத்திவைக்கவேண்டுமெனனுங் கவலைமனதிற் குடிகொ
ள்ளசஹோதராதி பந்துக்களையும்மற்றஉயிர்களையும் நிர்த்தாக்ஷண்

யமாய்க் கொலைசெய்வதில் சிறந்தினராயிருக்கின்றதைக்கண்டு ஜனங்கள்ஓகோ இதென்னவிபரீதம் குபீர் குபீரென்றெழும்பும் அனற்கொழுந்தோடுங்கூடிய அக்கினியானது தன்னிடத்திலுற்றவனைமாத்திரந் தகிக்கின்றது இந்த அசுரர்களாகிய அக்கினிக்கோபம் ஜனித்தால் சுரோத்யங்களுக் காலயமாகிற சிதகரதினையுடைய இஷ்டதுஷ்டஜனங்களாகிற காற்றில்கூடி மாதா பிதாப்மாத்ருகளத்ர புத்ரமித்ராதிக அத்துளையும் மழிவிடுகின்றதே யென்று சிந்தித்தவராய் அந்த அக்கினியைத் தணிக்கத்தாங்களும் அம்மிலேச்ச வொழுக்கத்தையே மேற்கொண்டவராயினர்.

மேலும் இக்கொடியகாலத்தில் புருஷர்கள்விவேகமாகிய ஐஸ்வரியத்தினைப் பெறத்தக்கது ஆத்மோஜ்ஜீவனமென்று சிறிதேனும் நினையாது நீர்மேலெழுத்தை நிகர்தாவ்யத்தைச் சிலையிலெழுத்தென்று கருதினவராய் உள்ளததினுள்ளமர்ந்து.

அடாதகாரியஞ்செய்தால் படாதபாடு படவேண்டும்.

என்று தண்டோராவி னொலியைப்போல பரமகிருபாவிசேஷத்தால் நீயறிவித்துவரச்செயும் முன்பின் எண்ணிப்பாராமல் பிறர்ப்பயத்பனங்களைக்கெடுத்தல் தீதுக்குதவிசெய்திடில் வழக்கோராமுறைத்தல்முதலிய அநியாயபார்க்க உதவியைக்கொண்டுதங்கள் காரியங்களைமுடித்துப் போராசையெனும் பைத்தியம்பிடித்து மேன்மேலும் பொருளையே யிச்சித்துவருகின்றனர் இவ்வாறுசம்பாதித்த பொருளுமற்ற காரியங்களுக்கு ப்ரயோசனமாகாமல் தங்கள்தேஹத்தைப்பொழிப்பதிலும் வெளிமயக்கேசெயும் பரத்தையர் விஷயத்திலும் விநியோகப் படுகின்றது.

ஸ்திரீகளோ சேற்றில்நாட்டிய கம்பம்போன்ற மனமுடையவர்களால் பர்த்தாவே கர்த்தாவென்னும் பழவார்த்தையைமறந்து பரபுருஷரையேயிச்சித்து விபசாரிகளா யிருக்கின்றனர்.

அன்றியுஞ்சேதனாசேதநஸ்தூலசூக்ஷ்மங்களான ஸர்வப்ரபஞ்சங்களிலும்ஸர்வசாக்ஷியுள்ளும்புறம்பும் வியாபகத்துவன் கலாநிரைஸ்வாமியாய்ஸர்வஸ்வாமியாக்கின்ற நின்னையாராதியாமல் மனுஷ்யகல்பித சமயங்களாகிற அஞ்ஞானாந்தகார குகைகளிற் பிரவேசித்தவனாய் ஸ்ருதிஸ்மிருதி மார்க்கத்தை முழுதுந் துறந்த வசிவயோகிகளாயினர்.

இவ்வாறு அதர்மம்செழித்து வளர்ந்து உலகத்தை பாபம்மூடிக்கொள்ள பணம்நிலைக்காமல் மந்திரபலிக்காமல் எங்கள்தபம்பங்கப்பட்டு நின்திருவடிகளை சரணம்புகுந்து முறையிட்டுக் கொள்ளவர்

தோமென்று மெலிந்து சொல்லிநிற்க பக்தபரிபாலன் ப்ரபுவாகும் ஸ்ரீஎம்பெருமான் தன்ஸந்நதியில் பரதவத்தை வெளியிட்டுக் கொண்டிருந்த ஸ்ரீஆஞ்சநேயமூர்த்தியையும் வால்மீகர் வியாசர்முதலானமஹாரிஷிகளையும் திருவனந்தாழ்வானையும்பார்த்தருளி இந்தநித்யவிபூதிவாசிகள் நித்யவஸ்துவாகிய நமதுநித்யசின்மயகுணனுபவத்தால் நித்தியாநந்தானுபாவஞ் செய்துகொண்டிருக்கும் வாறலீலாவிபூதியாகிய பூலோகத்தில் உண்மைநிலையறியாது மஹாமாயையென்னுங் கோடையினாலே தபிக்கப்பட்டு அலைகின்ற ஜீவாத்மாக்கள்நம்மையடைந்துக் கிருதார்த்தர்களாகவேண்டுமென்று திருவுளங்கொண்டிருக் கின்றோமாகையால் நீங்கள் அப்பூலோகத்திலவதரித்து அஜ்ஜீவக்கோடி களுக்கு பேரின்பமென்னும் அளவிலாச்சாயையோடுங்கூடிய வேதநிச்சயதத் வார்த்தங்களென்னும் ஆலாவிருக்ஷங்கள்சூழ்ந்த அதிகுளிர்ச்சி பொருந்திய ரமதமான தாமரை தடாகம் போன்ற விசிஷ்டாத் வத்சித்தாந்தஸ்தாபகஞ் செய்தும் பக்தியோய் மார்கத்தையும்சொரூபநிஷ்டையும் பிரமக்ஞானத்தையும் மாசறவிளங்கச்செய்துக் கன்புஆசாரம் ஜீவகாருண்யம்ஸத்திவாய்மை முதலியவைகளைத் தழைக்கும் படிசெய்து பின்புநமது பரமபதம்வந்து சேரக்கடவீர்க ளென்று திருவாய்மலர்ந்தருள ஸ்வாமி நியமனப்படியே திருவனந் தாழ்வான் ஸ்ரீ பெரும்பூதூரில் ஜகத்குருவாய் ஸ்ரிபாஷ்யகார ரென்னும் வேதவியாசர் ஜகந்நாகத்தில் ஜெயதேவஸ்வாமிகளென்னும் வால்மீகர் டில்லியில் துளசிரென்றும்சுகாசியில் யோகிசம்பந்தராய் கபீர்தாசரென்றும் அனுமார் கூடாதேசத்தில் இராமதாஸ்சுவாமி களென்றும் மற்றுச்சிலர் சில வேறுபட்டணங்களில் லோகோச்சீவன நிமித்தம் அவதரித்தார்கள்.

இப்படிப்பட்ட ஜீவன்முத்தர்களுடையசரித்திரங்கள்போஜனராகத்தோடு வருந்துகின்ற ஜனங்களுக்கு ஞானரசந்ததும்புகின்றபரமஹானந்த தேவாமிர்தத்தைப்புகட்டி அவ்வியாதியைநீக்கிஅழிவில்லாஸாயுச்சிய மளித்தலால்மேற்சொல்லிய பிரமக்ஞானிகளுடையசரித்திரங்களும் சேஷாம்சபூதரான ஸ்ரீஉடையவர்சரித்திரபரபாவமும் ஸ்ரீஆஞ்சனேயாம்சரான இராமதாஸ்சுவாமிகளுடைய சரித்திரவைபவமும் பகவத்பக்தியிலும்பாகவரைத்திலும் சிறந்தும் மஹாயோகீந்தரராகிய ஸ்ரீ பாத்துவாசமுநிவனது தோத்திரத்தின் காரபெழுந்தருளியிருக்கும் ஸ்ரீமான் குத்தனூர் சின்னசாமிசாஸ்திரியாரவர்களால் இனியதமிழ்திறந்தசொற்களால் கீர்த்தனரூபமாக இயற்றப்பட்டிருக்கின்றன.

மேலும் இந்நூலாசிரியர் சகலரும் சகுணக்கியானத்தில்மூண்ணர்தேர்ந்துசம்சாரமென்னும் விருட்சத்திற்குவிதைகளாகிறகாணி

யெமதுமதென்னும் பற்றுக்களி னின்றும்போந்து பின்னரிமக்கு
ணதியானத்திற் பிரவேசித் ததிலே ஜீவகோடிகள் உச்சீவிக்கத்தக்
கவழியென்று தெரிவிக்கப் புத்தி சித்திவிரத்திமுத்தியடைவதற்கு
அந்தசங்கமான பகவத்பத்தியே எல்லாவழியிலும் லேசானவழியெ
ன்றுரூபிக்கவும்பத்தியே வடிவாகக்கொண்டு ஓர்பெரியவரால் பத்
ராசலஸசல மஹாத்மீயத்தையுணர்ந்து அக்கினியின்மீது திவ்யதிரு
மண்டபத்திற் கோபுராதிகளைக் கட்டுவித்தல் முதலான கைங்கரிய
ங்களைச்செய்தும் திவ்யதேசயாத்திரை செய்துக்கொண்டு பத்ரா
சலசமீபம்வந்தசர் வேந்தா நிக்ரகஸ்தாபப்ர மகானந்தானுபவஸ்ரி
சுப்ப்ரமகரிஷியாம்ஸரான ஸ்ரிகபீர்தாசரால் மனமொடுங்குமாக்
க்ம் உபதேசிக்கப்பெற்றுக் கொண்டும் உபமானஷிகவகாமஷிமை
வசிக்கும் ஸ்ரிபுருஷோத்தமரின் திவ்யகல்யாணகுண பரிமளத்தை
ச புஞ்சமான ஆந்தரக்ஙத சொற்களென்னுஞ் சுகந்தமலர்களாற்
றொடுத்த கீர்த்தனமாலைகளைத் தினந்தோறும் ஸ்ரிபத்ராசலேசனு
க்குச் சமர்ப்பண வண்டுகள்போலவேமொய்த்த ஆத்மகோடிகளு
க்குப் பரமாருண புத்தியாகும் ஸ்ரி இராஜா சாரியைப்போல திரு
மந்தாரகஸ் பார்த்தங்களை அநுக் கிரகத்தும் இந்தலீலாவிதிபூயில்
கோபன்னு வெனனுங் திருநாமத் தோடுங்கூடி யெழுந்தருளி ஸ்ரி
பதராசல ராமதாஸ் ஸ்வாமிகளையே ஓர்ஸ்தாக்ஷயான சாழியாகயவ
தரித்து அவர்சரித்திரத்தை பகவதப்ரீதிரார்த்தமாய்ச் செய்தருளி
னர்

அன்றியும்இவர் இச்சரித்திரம்கீர்த்தன ரூபமாகையினுல்கற்ற
வர்க்கேயன்றி மற்றவர்க்குளளிதில் புலப்படாதெனக்கருதிமத்யே
மத்திய சிலவிருத்தங்களும் வசனங்களுஞ்சேர்த்துக்கீர்த்தனங்களு
க்குள்ள ஸந்தர்ப்பானு ஸந்தாப்பத்தை தெரிவிக்கின்றனர் இக்கீர்
த்தனங்கள் மிஸ்ரமிஸ்ரகண்டசங்கீர்ண தாளசகிதஸந்தாய்புரநகு
ணராகங்களோடுங்கூடியதாகையால் பாகவதர்க்கேயன்றிச் சங்கீத
வித்வான்களுக்கும் அளவிலாமகிழ்ச்சியைத்தரத்தக்கதாயிருக்கின்
றன.

இவ்வளவோ இச்சரித்திரப்பிரபாவம் அன்றுமற்றென்னெனி
ன்யதார்த்தஞானமுணராது ஒழிக்கத்தக்கவைகளில் வினைகவைத்
தஓர்மமதையினுலெண்ணதுமெண்ணி யெங்குந்திரிந்து கலங்குகின்
றனஒவ்வொருவரும் இப் க்தி யோகநூலிலுள்ளவேதமுடிவானத்
தவராதல் பாராயணத்தால் அநித்தியப்ர பஞ்சத்திற்பற்றொழிந்து
திவ்யமங்கள் மூர்த்தியை.

திருமங்கையாழ்வாரைப்போல:

வாடினேன்வாடி வருந்தினேன்மனத்தாற்
பெருந்துயரிடும்பையிற்பிறந்து
கூடினேன்கூடியிளையவர்தம்மோ
டவர்தருங் கல்வியேகருதி
ஓடினேனோடியுய்வதோர்பொருளா
லுணர்வெனும் பெரும்பதந்தெளிந்து
நாடினேன்நாடி நான்கண்டேன்
நாராயணாவென்னுநாமம்.

என்று அனலிலிட்ட வெண்ணெய்போற்கரைந்து ரூபமில்லாமலே ஒன்றும்பலவுமாய்த் தோற்றி எப்பொழுதுமாறாத நிர்மலஸ்வரூபியாகியும் தனக்கு வேறாகாரமில்லாது தாஸர்வ ஜகதாதாரபூத அபஸ்கான காரணகர்த்தாவாகியும் ஸ்கராபக்ஷபகாம நேயிபாகி ஸர்வலோக ஸரண்யஸ்வாமியாகின்ற ஸ்ரீதாரக பரப்ரம்மநித்தியமாகிற வஸ்துவென்று கண்டுகொண்டு ஸாஸ்வத சுபானுபவஞ்செய்வார்களென்னின் இதன்மாட்சிமை அறியாக்குழந்தையாகும் என்னாற் புகழ்ந்து சொல்லக்கூடியதோ.

முகவுரை முற்றிற்று.

ஸ்ரீவாசுதேவாயநம.

இங்ஙனம்,
ஸ்ரீமான்
சின்னசாமிசாஸ்திரியாரவர்கள்
சிஷியனாகிய
திரிசிரபுரம்.
இராஜகோபாலுநாயுடு



ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீமத்வரவரமுநயேநம:.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

ராமதாஸ்சரித்திரக்கீர்த்தனைகள்

ஆசிரியர் திருவடிகளே சரணம்.

நான்முகம்.

விருத்தம்.

தராதலத்திலவதரித்த ஜானகிமனங்களிக்க
நராவதாரஞ்செய்கோங்கும் ராகவமூர்த்தியென்னும்
புராதனப்பொருளைநம்பிப் பூமிசைமகிமைபெற்ற
இராமதாசன்கதைக்கோ ரெழிற்குருபதங்காப்பாமே

கீர்த்தனம்-க.

இ-ம்-ஸ்ரீராகம்-தாளம்-ஆதி.

பல்லவி.

சதாசாரிய சரணம் சரணம்
சிங்கார்ணவ தரணம்

அநுபல்லவி.

உதாரமுகுந்த பாதாரவிந்த
சுதாரஸிரகந்த சுதாரஸகந்த (சதா)

சரணங்கள்.

க. திருபுவியகரணம் கவிகுலாபரணம்
அவித்தியாவரணம் குவியரவிகிரணம் (சதா)

உ. அருணமெனவெறுக்கும் சகுணமெனப்பொறுக்கும்
தருந்தகாதென்றிருக்கும் மிகுமிருளையறுக்கும் (சதா)

ங. தொந்தமிலாஙாமி சந்ததாபிராமி
அந்தமுகதிசாமி இந்தச்சின்னசாமி (சதா)

நூல்.

பத்ராசலஸ்தலமஹத்வஸங்கிரஹம்

ஸ்ரீமந் மலகுணைபதராயும் சகலபுராண வியாக்கியான வைகரீசமேதராயும் நித்தியபூகருமாகிய பூதரைப்பார்த்து மௌனசீலராகிய சௌனகாதிமுனிகள் ஐயாபுராணவிக்யாதரரே பத்ராஜலமகாத்மியத்தைத் தன்றாகச்சொல்லியருளவேண்டுமென்று பிரார்த்திக்கச்சூதபௌராணிகர் ஓகோமுனிகளேபிரமருத்திராதிகளாலும்சொல்லற்கரிய பத்ராஜலமகிமையைச்சொல்லஎன்னலாகுமா ஆகிலும் அறிந்தமட்டும்சொல்லுகிறேன்கேளுங்கள் பூர்வத்தில் மேருபர்வதராஜன் தனதுமனைவியோடு அதியுக்கிரமாய் வெகுகாலந் தவஞ்செய்யக்கமலபவன் அகங்களித்திவன்முன்வந்துஎன்னவரம்வேணுமென்ன பரமபாகவதசிகாமணியாகியபுத்ரன்தேவையென்று மேருபர்வதராசன்கேட்க அப்படியேதந்து அரவிந்தபவன் அந்தாத்தானமடைய அநுக்கிரகப்படிக்கு மேருபர்வதராஜன துமனையாளிடத்தில் பத்திரனென கிறபிள்ளை பிறந்தவன் பிறந்து பாலப்பருவத்திற்றானே குணங்களிற்சிறந்து ஞானபாகத்தைத்தெரிந்து இதரம்வஸ்துகளையுமறந்து ஆராவமுதமான ஸ்ரீராமமூர்த்தியை அகிலலோக மாதாவென்னும்

சீதாதேவியோடும் லட்சுமணரோடுங்கோடி கோதாவரிதீரத்தில்வெகுகாலந்தவஞ்செய்ய எம்பெருமான் சானகி சௌமித்திரசஹிதராய் பிரத்தியட்சமாகவந்து தரிசனந்தந்து என்னவரம் வேணுமென்றுகேட்டருள தங்கள்திருவடியே வேண்டுமென்றவன்கேட்க பகவான் எனதுதரிசனம் போகதனைக்கொடாமல் ஆதியிலேயே மோட்சத்தைக் கொடாதாகையால் நீ யிவ்விடத்தில் உனது பருள்ள பர்வதமாகி எங்களுடைய அர்ச்சாரூபங்களை சிரசாகத்தரித்துக்கொண்டு அடியார்கள் செய்யும் அலங்காரப் பிரதட்சண வந்தனஸ்தோத்திராதிகளையுங்கொண்டு பிர்மபிரளயம்வரையில் ஆமோதித்துக்கொண்டிருந்த காலத்தில் என்னிடத்தில் ஐக்கியமடைவாயென்று ஜகதீசனருள அவனப்படியே பத்ராசலமாக அவனதுசிகரத்தில் இவ்வாலத்தில் சீதாலட்சுமணசமேதராய் ஸ்ரீராமமூர்த்தி அர்ச்சாரூபியாய் எழுந்தருளி அத்யாபியெல்லவர்க்கும் தரிசனந்தந்துகொண்டிருக்கிறுரென்று எனதாசிரியரான வேதவியாசபகவானுல் கேட்டபடிகருத் தங்களிடத்தில் விக்யாபனஞ்செய்தேன் கேட்டீர்களோ சௌனகாதிகளேயென்று சூதபௌராணிகர் அருளிச்செய்ததாக பிர்மாண்டபுரோணேத்தர காண்டத்தில் ஸ்தலமகிமானுவர்ண பிரகரணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது

விருத்தம்.

கோதாவரிதீரந் தனிலத்தியந்த
 கோமளமாயய பத்ராசலத்தில்வாழும்
சீதாலட்சுமண பாதசத்துருக்ன
 சேவிதனுய்விளங்குந் தேவாதிதேவன்
பாதாரவிந்தங்களிற் பக்திசெய்து
 பார்மிசைவாழ்வதற்கும் பாஞ்சேர்வதற்கும்
ஆதாரமவன்றுனென் றெண்ணிநன்ரு
 யடுத்திட்டார்வாசமங்கு தொடுத்திட்டாரே.

கீர்த்தனம்-உ.

இ-ம்-கல்யாணி-தாளம்-ஆதி

பல்லவி.

சுயோசிபகவது பயோகநியோகி
சுகிருதபாகி யாகியிருந்தார்

அநுபல்லவி.

பயோநிதியைவிட்டயோத்திவந்த
பத்ராஜலராம பக்தனையுகந்த (சுயோசி)

௧. ராயசத்திலிருந்து காயசம்ரக்ஷணம்
ஞாயமாய்ச்செய்துமு பயமாய்லக்ஷணம்
பாயசரூபநாம பாருநல்லபட்சணம்
பாசுகந்தருமென்று பந்திசெய்யத்தக்ஷணம்
தோயஜநேத்திர னருமருளாலே
சுபநேராகி யொருக்காலே
மாயமின்றிநல் வழியிலமேலே
வாஞ்சைகொண்டு தொண்டுவரும்போலே
ஹேயமதாகிய காடஜபாதையைவெல்ல
நேயமதாரு காயககாமஞ்சொல்ல
தூயசின்னசாமி போலநல்ல(சுயோ)

வசனம்.

இவ்விதமாகப் பத்ராசலததில் தாலுகா கச்சேரியில் இராயச உத்தி யாகத்திலிருந்த கோபன்னவானவர்பன்னிரண்டத்தியாயமுள்ள பத்ராஜலஸ்தலமஹாத்மிய காந்தத்தைககண்டு பரமானந்தங் கொண்டு தாசில்தாரன் முதலானபெருத்த உத்தியோகஸ்தர்களிடமித்தப் பெருமையைவிண்டமாதந்தோறும் அவரவர்க ளிவ்வளவென்று கொடுக்கும்படிச் சந்தாயேற்படுத்திக்கொண் டவர்களைக்கொண்டந்ததாலுகாவைச்சேர்ந்தபெருததகுடித்தனக்காரர்களுக்குஞ்சந்தாயேற்படுத்திப் பிரதிமாதம் பணத்தைத் தானேதண்டிப் பத்ராசலத்தின்மீது மாஞ் செடி கொடிமுடியிருந்த சந்நிதியில் மராமத்து செய்து சுபபுரோக்ஷம பண்ணிமலையேறி யிறங்குவதற்கு மார்க்கத்தையேற்படுத்திப பசுவதாராதன நிமித்தம் ஒருஸ்ரீவைஷ்ணவரையேற்பத்தி நித்தியபூஜை நடாத்தக்கொண்டுவரக் கண்கொள்ளாத சந்தோஷம்பூண்டு இராமதாஸர் பகவானைத்துதித்தல்.

கீர்த்தனம்-௩.

இ-ம்-பிலஹரி-ரூபகம்.

பல்லவி.

எங்காரு மறவேனே
இனிநானிங்கு பிறயேனே

அநுபல்லவி.

அங்களாதிமூலமே — பென்னை
யாளென்றுனைகூவ — ஆண்டவனேயுனை (எங்கா)

௧. இடையையும்பொன் — னுடையயுமெழிற்
றுடையையும்நல்ல — நடையையுந்தியல்
படையையும்முத்துக் — குடையையுமென்றுக்
தடையில்லாத — கொடையையும்
கடைவிழியுடை — வாளழகையும்
விடையெழுமத — வேளழகையும்
தொடைமருவிய — தோளழகையும்
சடையனும்பணி — தாளழகையும்
அடைந்திடும்படி — யாரைநொந்தான்
புடைதங்கிய — பேரையுங்கான் (எங்கா)

௨. ஹாரத்தையும — நற்கோலத்தையும்
அலங்காரத்தையும் — மஹாவீரத்தையும்
மேருதீரத்தையும் — மிகுசூரத்தையும்
வரோதாரத்தையும் — கெம்பீரத்தையும்
தாரகமந்திர — சுகத்தையும்
சாரஸபதகர — சுகத்தையும்
நீரஜநேத்திர — சுகத்தையும்
சேரவரும்பர — சுகத்தையும்
பூரணமாம — கத்துவத்தையும்
காரணகாரண — தத்துவத்தையும் (எங்கா)

௩. தலத்தையும — இந்நிலத்தையும்
பத்ராசலத்தையும் — இதன்பிலத்தையும்
ரவிகுலத்தையும் — தேஜோபலத்தையும்
நதிஜலத்தையும் — நிர்மலத்தையும்
பலவிதமாங் — திருநாளையும்
வலதுகாங் — திருநாளையும்
புலன்வசமாம் — வருநாளையும்
பயினுண்டாம் — பெருநாளையும்
அலாகிலாகுணகண — சிந்தனை
நலமிகுசின்னசாமிதொழு — மூர்த்தனை (எங்கா)

வசனம்.

இங்கப்பிரகாரமிருக்குந்நாளையில் டில்லியைச்சேர்ந்தஹைதிராபாத் தானேஷாவென்னும் பாட்சாவானவன் தினதிராஜ்ஜீயத்தைச் சேர்ந்த தாலூகாக்களை குடிகளினது சம்மதியின்மீ தனேகம்பெயர்களுக்குச் சுதாவாகக்கொடுத்துப் பத்ராசலதாலூக்காகுடிகளைவரவழைத்துக் கேட்கும்போது கோபன்னபேருக்கு கபாவாகக்கொடுப்பதெங்களுக்குச் சம்மதமென்றுசொல்லக்கேட்டுஅப்படியேஇராமதாஸரைவரவழைத்து ஜாரிதாகீது கொடுக்கப்பெற்றுக்கொண்டுபாட்சாவைநோக்கி வருடத்திற்குப் பதினாயிரம்வராகன்விதம்பன்னிரண்டுவருடஞ்சேர்த்துப் பதின்மூன்றாவது வருடமுதலில் மொத்தம் இலக்ஷத்திருபதினாயிரம்வராகனையும் ஒரேதேதியிற் செலுத்துகிறேனென்று வணங்கிக்கேட்க தானேஷா அப்படியேசரியென் றுத்தரங்கொடுக்கப் பெற்றுக்கொண்டு பத்ராசலம் வந்துசேர்ந்து சீதாலட்சுமண பரதசத்துருக்கன் அனுமத்சமேதரா யெழுந்தருளியிருக்கும் வேதண்டசுதண்டாய பாகுதண்ட சாக்ஷாத்கோதண்ட தீக்ஷாகுருவின்தாலயகயிங்கரியத்தை விசேஷமாய்நிறைவேற்றுவித்தியோச்சவவாரோச்சவ பக்ஷோச்சவ மகோச்சவ ருத்தோச்சவ அயனோச்சவபிர்ம்மோச்சவங்களெல்லாம் நடத்திக்கொண்டுவரக்கண்டு இஷ்டஜனங்கள்சர்க்கார்பணத்தை இப்படிசெலவுசெய்தாற் பின்புவருத்தம்நேரிடுமேயென் றுசொல்லும்போது பன்னிரண்டுவருடம்நாமிருப்பதென்னநிச்சயமென் றுசொல்லிக்கொண்டுதன்னிடமிருக்கும்உத்தியோகஸ்தரையெல்லாம் சம்பளதாவேஷாபிரகாரம் ஸ்ரீராமஜெயம்எழுதும்படி செய்துக்கொண்டு யிருக்கையில் பத்ராசலத்திற்குச்சுமார் மூன்றுகாதவழி தூரத்திலிருக்கும் நாராயணபுரமென்னும் கிராமத்திலொரு நியோகிப்ராமணன் உத்தமகுணச் சம்பன்னனாயும்உத்தமவதியாயுமிருக்கும் தனது கன்னிகையை யிவருக்குக் கொடுக்கிறதாகநிச்சயித்து முகூர்த்ததினத்தையு மேற்படுத்திக் கல்யாணப்பத்திரிகையனுப்பக்கண்டு சர்வாச்சிரமங்களுக்கு மாதாரமான நல்லறமில்லறமென் றளவற்ற வஸ்துக்களையுஞ் சேகரஞ்செய்து கொண்டநேகம்பிராமணர்கள் சுயம்பாகி பரிகாரகர்கள் சேவகாகள்வண்டிகளுடன் புறப்பட்டு மார்க்கத்திற்கணவாய்ப் பிரதேசத்திலிறங்கித்தொடங்க முன்னடந்தப்பிராமணர்கள் சாயங்காலஞ்சுமார்நாலுமணிகாலத்தில் இவர் சுபேதாரானகையாலும் கலியாணநிமித்தம்வருகிறசமையமாகையாலும் பொருள்விசேஷமாயிருக்கும்அபகரித்துக் கொண்டுபோகலா மென்கிற துரபிப்பிராயங் கொண்டங்குவந்து

கும்புகூடிக்கொண்டிருந்தசுமார் இருநூறுபேர் திருடரைக்கண்டுப யந்து, கையிலிருந்தசொம்பு மடிசஞ்சி பஞ்சபாத்திர முத்தாரணி முதலானவைகளைநழுகவிட்டுக் கண்ணீரொழுகவிட்டெதிர்கொண் டோடிவந்துசொல்லக்கேட்டிராமதாஸர் புன்னகைகொண்டபயந் தந்து சர்வபய நிவாகனான சர்வேசுவரனைத்துதித்தல.

கீர்த்தனம்.

இம் பரிசு-தாளம்-ரூபகம்.

பல்லவி.

காக்கவரவேணும்-ராமா-வலக்
கைதரவேணும்-ராமா

அநுபல்லவி.

ஆக்களித்த வழிதற்குமாதாரம்
ஆனவனேமுன்பென் னருகிலின்னேரம் (காக்க)

சரணங்கள்.

க. கும்பியானுள்ளம் வெதும்புவதைக்கண்டு
தம்பியும்நீயும்வில் லம்பிரண்டுங்கொண்டு (காக்க)

உ. நாவலர்பாவலர் ஆவலாய்வருந்தும்
கேவலனேயென்றும் காவலாயிருந்தும் (காக்க)

ங. கருடபகவா னிருதிருத்தோளை
மருவிதிருடர் நெருங்குமிவ்வேளை (காக்க)

ச. அடியேனென்றெண்ணி யருண்மழைபெய்து
கொடியிலரிகள் நூங்கியோட்ச்செய்து (காக்க)

ரு. தும்பிமுகன்குக னம்பிகையன்பாயே
தம்பிரானென்றிடும் எம்பிரானேநீயே (காக்க)

சா. வேதனேடுபூத நாதனுமெப்போதும்
பாதனேயாசந்த போதனேயிப்போது (காக்க)

எ. சாமான்யதெய்வ சங்கத்துக்காளல்ல
சீமானேசோதனை செய்திடும்நாளல்ல (காக்க)

அ. வணக்கமாயோதும் வார்த்தைதட்டாமல்
இணக்கத்தையறிந் தெனனைக்கைவிட்டாமல் (காக்க)

கூ. ஆதிமூலமென்னும் ஆனைக்கபயம்
சாதித்தபடிக்குச் சாதிக்கச்சமயம் (காக்க)

க0 பாஞ்சாலிக்குப் பயந்தவேக
ரைஞ்சைகோடுகண வாயிமென்முன்னுகை(காக்க)

கக. குணத்தைக்கொண்டாடும் கொத்தடிமையென்று
மணம்நிறைவேறும் வண்ணமுன்னின்று(காக்க)

கஉ. சத்தியவுருவுதனைத் தாங்கியொருக்காலே
வெற்றிபெற்ற வித்தகனேயதுபோல(காக்க)

கங. மந்தாமேந்தி யருந்தவமுதம்
தந்தப்படி யுகந்துசந்ததம்(காக்க)

கச. இடிகியாகியொரு கடியாலேபகை
மடியையகை விடுத்திட்டவகை(காக்க)

கரு. நரசிங்கனாகி யிரணியனைக்கொன்று
சுரரன்பர்துன்பந் தொலைத்தோனேயின்று(காக்க)

கசு வாமனனாகி மாபலியடங்கி
க்ஷேமம்பெறச்செய்த சிருட்டொடங்கி(காக்க)

கஎ கார்த்தவீரனையுங் கண்டித்துப்பூமி
திர்த்தங்காசிபனைச் சோச்செய்தஸ்வாமி(காக்க)

கஅ. சத்துருவாகிய பத்துமுகத்தானைக்
கொத்துடனேகொன்ற கோனேயடியேனைக்(காக்க)

ககூ. விபீஷணன்சுக்ரீபன் விண்ணோருங்களித்துப்
பாடப்பெற்றோனே பாராகந்தமளித்துக்(காக்க)

உ0. வஞ்சகனாகிய கஞ்சனையும்
துஞ்சச்செய்தவிஷ்பிர பஞ்சவாந்தந்து(காக்க)

உக. வம்பாடும்ராட்சதன் வணங்கச்செய்தங்கே
நம்மாடுவானை ரட்சித்ததுபோலிங்கே(காக்க)

உஉ. பண்டுஜகந்நாத பார்த்திவேசனஞ்சம்
உண்டும்வாழச்செய்த உனதடிதஞ்சம்(காக்க)

உங. தொடருமிடர்கள் தொலையப்பொடித்துப்
படருஞ்சோரரைப் பறக்கடித்துக்(காக்க)

உச. ஆடகம்வருமென் றாசையிற்சுற்றிக்
கூடவந்தோரையுங் கோபன்னனைப்பற்றிக்(காக்க)

உரு. என்னமோசொன்னனென் றெண்ணமலேர்த்து
இன்னசாமிபோலே யென்னையும்பார்த்துக்(காக்க)

வசனம்.

இந்தவிவரமாகச் சர்வேசுவரனைத் துதித்துக்கொண்டு தீரமாய்க் கணவாய்ப் பிரதேசத்திலிறங்கும்போது மத்தியில் வரப்பட்ட கொல்லாழ்வான் ரொக்கம் நகைநட்டு வேட்டி சேலை முதலியவைகளுள்ளவண்டியின் இரண்டுபக்கத்திலும் இரண்டு வெள்ளைக்குதிரைகளின்மீது இரண்டுசூரர்களாய்க்கட்கபாணிகளாயும் மற்றச்சாமான் வண்டிகள் பரிசனங்களின் இருபுறமும் துபாக்கிகளைபார்பண்ணிக்கொண்டுசிபாயிகள்இரண்டாயிரம்பேர்களாயும்ஜகதீசன் ரூபிகரித்து அந்தத்திருடர்களுக்குமாத்திரம்மூன்றுதரம்-மறைந்துமஃறந்து தரிசனங்கொடுக்கக்கண்டுகோபன்னுபரமபாகவதனேஎன்று நினைத்துஎல்லாரு மிவருடைய பாதாரவிந்தங்களில் தண்டம் சமர்ப்பித்து அஞ்சலியஸ்தர்களாய்சேதியைச்சொல்லக்கேட்டுங்களுக்கு எம்பெருமானுடைய திவ்யசேவைகிடைத்தபடியால் நீங்களே பரமபாகவதோத்தமர்களென்று சொல்லிச் சேவித்தந்தச்சேவை தனக்குக் கிடைக்கவில்லையே யென்றுருகி எம்பெருமானைத் துதித்தல்.

கீர்த்தனம்-ரு.

இ-ம்-நாதநாமக்கிரியை-தாளம்-அடதாளம்.

பல்லவி.

நாராயணா நதஜன
பாராயணா

அநுபல்லவி.

பாராய்நீராய் பாசிக்கால்விண்ணாகி
காராகிக்காரணங்க ளானமகாயேகி நா

சரணங்கள்.

க ஆராயுமறிவினுக் கறிவாகிப்பெருக்கும்
சீராயன்பர்கள் சித்தத்தினிலிருக்கும் நா

உ பஞ்சதன்மாத்திரமாய்ப் பரவிப்பஞ்சகோச
ரஞ்சகனாகியெங்கும் ரமிக்கும்ஜகதீச நா

௩ ஒருபதத்தா லுலகந்தாங்கும்
திரிபதத்திவி திகழ்ந்தோங்கும் நா

௪ பூரணப் பூரணஞான
காரணக் காரணனான நா

ரு. விதியும்பயகதி நிதிபதியுமதி
கதிர்பசிபதியுந் துதிஸ்ரீபதி நா

சு. ஸாராதிசுவர சிராதீசுவர
பராதீசுவர பராத்பரதா நா

எ. நித்தமுமித் தகைபார்க்கும்
பத்தனேச்சுத்தனென் றேர்க்கும் நா

பூதமய வேதமயவாதி
நாதமய நிதமயஜாதி
பேதமய மோதபயபூதி
போதமய பாதசற்சோதி
பொன்னடியைத் தன்னகத்திலிணைத்திடும்
சின்னசாமியைச் சேர்த்தணைத்திடும் நா

வசனம்.

இவ்வகைச் செவ்வையாய் அய்யனிடம் மனம்பதித்துமதித்து துதித்தும் வாதிருக்கையில் தீராக்கலக்கங்கொண்டு கண்ணீராருகப்பெருக மயிர்க்கூச்சலிட்டுத் தனதன்பினுறுதியால் விநயவிஷ்ரேயுக்தமாகப் பகவானைத் துதித்தல்

கீர்த்தனம்-கூ.

இ-ம்-சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

இன்னமும்பராமுகமா ராமா
இதிலுனக்குச் சுகமா

அநுபல்லவி.

பன்னகபூஷணனும் பாகாரியும்போதில்
துன்னவனும்பணியும் துரையேயென்மீதில் இன்

சரணங்கள்.

க. சினமிராஜாத்தையும் சேராமற்சேராமல்
மனமுன்னிடம்நிலைக்க வரந்தரவாராமல் இ

உ. பின்னமதியின்வேரைப் பேர்த்தெறிந்துய்யாம
உன்னதசந்தோஷம் உண்டாகச்செய்யாமல் இ

ந. என்னத்துதித்தாலும் என்வார்த்தையோராமல்
சின்னசாமியென்று சிந்தித்துப்பாராமல் இ

வசனம்.

இவ்வண்ணம் துதிக்கும்போதெல்லாருங்கேட்க ஆகாசவாணியைக்கொண்டு பின்பு தரிசனங்கொடுப்பேனென் றெம்பெருமானருளினவி சந்தோஷமடைந்திருந்த கோபன்னவைநோக்கி யந்தத்திருடர்கள் ஐயா நீர் பரமபாகவத சிகாமணியாகையால்நாங்களிதுவரையிற் களவுசெய் திவ்விடத்திற் புதைத்துவைத்திருக்கும்பொருளை ஸ்ரீராமார்ப்பணமாய்உமக்குக்கொடுக்க நிச்சயித்தோமாகையால் அடியேங்கள்மீது தயைசெய்து ஸ்வீகரிக்கவேண்டுமென்று பிரார்த்திக்கும்போது கோபன்ன அங்கீகரித்தட்சணத்தில்அவர்கள்பொருளையெல்லாங் கொண்டுவந்து சமர்ப்பித்து வணங்கக்கண்டுபரிபூரணனுக்கிரகஞ்செய்தனுப்பிவிட்டு தனது பரிவாரத்துடன் நாராயணபுரஞ்சென்று மகோச்சவமாகத் திருக்கலியாணத்தைநிறைவேற்றிக்கொண்டு பத்ராசலம்வந்து சேர்ந்து தினந்தோறும் தெலுங்கில்தானே ஸ்ரீராமபரமாய் அநேககீர்த்தனங்கள்பாடிக்கொண்டு தினந்தப்பாமல் தனதுதிருமாளிகையில் பக்தஜனங்களுடன் தம்பூரு மிருதங்கதாள சகிதமாய் பஜனம்பண்ணிக் கொண்டிருக்கையில் கார்த்திகைமாசம் பானுவாரதினத்தில் வனபோஜனஞ்செய்ய எத்தனித்து நானாவித சம்பாரங்களைச் சேகரஞ்செய்துக்கொண்டுகோதாவரிதீரவனத்திலிருக்கும் மண்டபத்தில் எம்பெருமானை ஏளனம்பண்ணி ஆராதித்தநேக தீபாராதனஞ்செய்து தானும்போசனம்பண்ணிப்பாகவத கோஷ்டிகளுடன்கூடிப் பகவத்கதாசல்லாபஞ்செய்துகொண்டிருக்கையில் எதிரிச்சையாய் காசியிலிருந்து மகா பாகவதோத்தமராகிய கபீர்தாசர் பத்தினி புத்திர பக்தஜனங்களுடன் திவ்யதேசயாத்திரை செய்துக்கொண்டு இந்தவனத்தில் சிலதூரத்தில் வந்திறங்கிப் பகவன்னும சங்கீர்த்தனம் பண்ணிக் கொண்டிருக்கையில் அந்த மங்களத்தொனியைக்கேட்டு ஆரோபாகவதர்கள் வந்திருக்கிறார்களென் றறிந்துகொண்டு தனதுகோஷ்டியுடன் அங்குசென்று அருகிருந்தபெயரால் கபீர்தாசரென் றறிந்துகொண்டுஅவரிடத்தில் தான்உபதேசம் பெற்றுக்கொள்ள வேண்டுமென றுகொண்டிருந்த கோறிக்கை ஈடேறும்படியான நற்காலமுதயமாச்சுதென்று மனங்களித்தவரை துதித்தல்.

கீர்த்தனம்-எ.

இ-ம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி

பல்லவி.

கபீர்தாசர்நீரே சடைத்
தேறும்வகைச்சொல் வீரே

அநுபல்லவி.

அபீதராயடுத்தவர் விலக்கப்புரியும்
அருள்பெற்றவரென்பதற்கட்டியுமுண்டோதெரியும் க

சரணங்கள்.

க. நதிஜலத்தின்மீதுநடக்கிறவித்தையும்நமக்கண்ணும்போது
அதிதஞானிநீரன்றோ பாரும்பாரும் க

உ. சாதுசேர்வைதுர்லபம் தாசாதியினதுகருணைசுபம்
சதுசந்தேகமில்லை யினியெனக்கோர் க

ந. இப்படிக்கொற்றவும்மை யெவர்தான்தேடார்
ஆமையடக்கும்வகைபோல் ஐந்திரியங்களையடக்கியதால் க

ச. சீமையிலுமக்கிடு தேடினுங்கிடையாது
சின்னசாமியே யென்னுரைத்தப்பாது க

விருத்தம்.

மனமகிழ்ந்தன்புகூர்ந்து வணங்கியேராமதாசன்
கனகபீர்வதனம்நோக்கிக் கைகளைக்கூப்பிக்கொண்டு
வனத்தினிலடியாரோடு வந்தகாரியமென்றென்றே
வினவிப்பின்னிடரையெல்லாம் வெல்லுவான்சொல்லுவானே.

கீர்த்தனம்-அ.

இராகம்-ஸ்ரீராகம்-பனம்-ரூபகம்.

பல்லவி.

உபாயஞ்சொல்லவேணும்
ஓடுமனதடக்கிநாணும்

அநுபல்லவி.

உபாயங்களை யளிக்கத்தோணும்
அவிந்தையையொழித் தைவனைக்காணும் உபா

சரணங்கள்.

கோரக்கனைவென்றுமுந்தன் குருவாகியராமாநந்த
தீரனதுசயமுஞ்சிந்தச் செய்துபாதாரவிந்த
சாரமறிந்தவன்தந்த தாரகமந்திரஞ்சொந்த
சீரமுதமென்றுகந்த சின்னசாமியேயிந்த
பூரணஞானம்வந்த காரணங்களோடந்த (உபா)

விருத்தம்

இந்தவகை கோபன்ன னடியிற்சேவித்
தியம்புமுறைவினவிக் கபீரென்பானையா
எந்தப்பொருளுமிராம மயந்தானென்றும்
உந்தனுக்குளொன்றாகப் பார்க்கமேதை
உண்டாகியூர்ஜிதமா மனமொடுங்கும்
பந்தமெல ம்பறந்தோடு மிதுவேமார்க்கம்
பாரென்றான்பின்புனக் கீடாரென்றானே.

வசனம்.

பரமபாகவதோத்தமராகிய கபீர்தாசர்உபதேசிக்கப்பெற்றுக்கொண்ட கோபன்னா அந்தக்கபீரை மறுபடியும் வணங்கித் தேவரீருக்குப் பகவத்சாந்நித்தியமுண்டென்று கேழ்வியாகையால்அடியேனுக்கும் பகவத்தரிசனங் கிடைக்கச்செய்யவேண்டுமென்று வெகுவாய்ப் பிரார்த்திக்கக் கபீர்தாஸர் மனமிறங்கிக் கிருபை கூர்ந்து நாளையதினம் பனிரண்டுமணிக்குச் சுவாமியைஉமதிடமனுப்பிவைக்கிறேனென்றருளிச்செய்தவிடைபெற்றுக்கொண்டவருக்குவேண்டியசாமக்கிரியைகளை அபரிமிதமாய் வரவழைத்துக்கொடுத்துத்தனதுதிருமாளிகை வந்துசேர்ந்து மறுநாளும் அந்தவன மண்டபத்தில் எம்பெருமானை யேளனம்பண்ணி அநேகத்தீபாராதனார்த்தம் சால்யன்னசாக்குப் பக்ஷ்ய லேக்ய சோஷ்ய ததிட்சீரகிருதாதிகளையும் சித்தம்பண்ணிப் பகவதாகமனார்த்தம் புஷ்பமண்டபகஸ்தூரிகுங்குமகர்ப்பூர ஹிம்சல மிளித கந்தபுஷ்பஹார சதமூஹாரமுக்தாஹாரபீதாப்பராதிகளையும் சித்தம்பண்ணிப் பி மாணபோசனநிமித்தம் இலைகளைப் பந்திபந்தியாய்ப்பரிமாறி அன்னாதிகளையும் பரிமாறிக்கொண்டிருக்க அந்தவேளையில் கபீர்தாசர் பகவானைப் பிரார்த்திக்கப் பிரத்தியட்சமாய்வரக்கண்டு அடியேன் கோபன்னாவுக்குவரத்தத்தம்செய்தபடியிப்போதவருக்குத் தரிசனங்கொடுத்துவரவேண்டுமென்றுவிக்ஞியானம் செய்யக்கேட்டெம் பெருமானானவனுக்குச் சர்வசமக்ஞியானமில்லையே அங்கெனைப்போகச்சொல்வது சரியோ

வென்றருளக்கேட்டடியேனைப்பற்றி அவசியம்போய்வரவேண்டுமெ ன்று கபீர்தாசர் சொல்லக்கேட்டு பகவான் மகிஷரூபியாய்சேற்றில் வீழ்ந்து புரண்டெழுந்ததிவேகமாய் கொம்மாளமடித்துக் கொண் டோடிவந்து இலைகளில்பரிமாறியிருந்தவஸ்துக்களையும் யாகசாலை யிலிருந்தவஸ்துக்களையும் மிதித்துவைத்து அங்கேயே வளைந்தோடி ருக்கக்கண்டு பரமகோபங்கொண்டு கட்டைகளாலடிக்கும்பிராமண ருடன்கூட கைப்பிரம்பால்தானும் சூடுசூடாகவடித்துத்துரத்திவிட பகவான் இந்தரூபத்தை மறைத்துநிஜரூபத்துடன் கபீர்தாஸரிடம் வரக்கண்டு அந்தத்தாஸர் சுவாமி கோபன்னை நல்லபூஜைகொடுத் தாராவென்றுகேட்க ஆஆ கொடுத்தார் ஒருடம்பிருடம்பாச்சுதென் றுபரிகாசமாய்சொல்லி வீக்கத்தையும்காயத்தையும் காட்டக்கண்டு கபீர்தாஸர்மனம்நொந்துசைத்திய உபசாரஞ்செய்யும்போது பக வான் இராவணாதிகளிடத்தில் பட்ட அடியைக்காட்டிலும் இதுமிஞ் சியதல்ல நீயஞ்சவேண்டாமென்று கெஞ்சிக்கெஞ்சிச்சொல்லியந்த ரத்தனராக இங்கே கோபன்னை நூதனமாக பாகம்செய்வித்துத் தீபாராதனம்பண்ணித் தானும்புசித்துத் தனது கோஷ்டியுடன் கபீர்தாஸரிடம் வந்து சொன்னபடிக்குப் பகவான்வரவில்லையேயெ ன்றுகேட்கப் பகவானு வரவில்லை மகிஷரூபியாய்வந்த ஜகதீசனை அடித்துத்துரத்திவிட்டு என்னிடத்தில் வந்திப்படிச்சொல்வது சரி யோவென்று கபீர்சொல்ல அதைக்கேட்டுமனம்நொந்துமகாபராதி யாய்விட்டேனேயென்றுருகிப் பகவானைப்பாடுதல்.

கீர்த்தனம்-௬.

இராகம்-காம்போதி-தாளம்-ஆதி.

பல்லவி.

ஏனையாளக்கூடாது என்னுடனுனக்
கென்னவாதிப்போது

அநுபல்லவி.

தினையாளவுங்கருணை செய்தாலுமென்கலி
தீருமாகையான்மனந் தேறும்வகையைச்சொல்லி ஏனை

சரணங்கள்.

௧ அன்னைதந்தைகுருவு மருந்தோழனுந்தம்பியும்
அகிலமும்நீதானென் றனவரதர்தமதம்பியும் ஏனை

௨. ஆதாரம்வேறில்லையென் றறிந்தவர்க்குக்கிட்டும்
பாதாரவிந்தங்கிட்டும் படிக்கடிமைபட்டும் எனை

௩. கனவிலுமுனதடி வனசமதினும்
கனகமேகனமென நனவுதினந்தோறும் எனை

௪. தஞ்சம்பாத கஞ்சமென்பதைநாடி
அஞ்சலஞ்ச லஞ்சலென்றுரையாடி எனை

௫. பார்த்தனன்று பணிந்திடவெற்றி
ஏரத்தவன்சங்கை யினையகற்றி எனை

௬. தீர்த்தனுன தறிந்தேபுத்தி
சேர்த்தனைப்பார் யெனக்கைப்பற்றி

௭. பொன்னடிக் களவாகவுன்னும்
சின்னசாமி தாசனென்னும்

வசனம்.

இராமதாசர் இவ்விதமா யெம்பெருமானைத் துதிக்கும்போது கபீர்தாசர் அவருக்கும் சர்வேஸ்வர ஸ்வரூபத்துவத்தை யுபதேசித்துச் சிலநாளங்கு பத்ராலோசனைப் பஜித்துக்கொண்டு கோடபன்னுவினது விருந்து புசித்துக்கொண்டு சத்காலக்ஷேபரா யிருந்துடனே திருநாராயணபுரத்தில் திருவைரமுடி சேவைசெய்யக் கருதிப் புறப்படும்போது தானும் பாரசம்பாரகேசரஞ் செய்துக்கொண்டு புறப்பட்டுக் கோமளபுரமென்னும் கிராமத்திற்குச் சமீபத்தில் கிடக்கும்போது அவ்வூரிலிருக்கும் பரமபாகவதோத்தமியாகிய சொக்குபாயென்னும் மாதவஸ்திரீதா மிவர்களுடன் திருநாராயணபுரம் போய் பகவானைச் சேவிக்க அபிப்பிராயங்கொள்ளுதல்.

கீர்த்தனம்-௰.

இ-ம்-பிலஹரி-தாளம்-ஆதி.

பல்லவி.

சேவிக்கமனம்பூண்டாள் திருநாராயணபுரத்
திருநாளிற்பெருமானைச் சேவி

அநுபல்லவி.

ஆவிக்காவியெங்கு மேவியிருப்பவனைப்
பாவிவந்தவனையன்றி நாவிற்காவலர்தங்கள்

தேவியர்தனையரைக் கூவிமாவிநோதமாய்க்
கோவிந்தாவென்றேதுய்ய சோதிவிலாசரைக்கண்டு சே

சரணங்கள்.

௧. இக்குவலயத்தின்மீது முக்குறும்பையொழித்ததா
லெக்குறையுமில்லாத பக்குவக்கபீர்நம்மூ
ருக்குமணிநாதன்பாதம் சிக்கும்படிச்செய்வார்சுகம்
தக்குமென்றுலோசித்திந்தச் சொக்குபாய்பின்னேநடந்து சே

௨. மகட்குக்கணவன்மாமனும் அட்டிசொல்லமாமியார்
தட்டிமிரட்டிக்கம்பத்திற்கட்டி முட்டியாலேகுட்டி
எட்டியடித்துக்கோபித்துக் கிட்டிப்பதத்தாலுதைத்து
கெட்டிக்காரியென்றிருந்தேன் பட்டிநீயென்றுதிட்டியும் சே

௩. இன்னமுள்ளபந்துக்களும் என்னடியம்மாவென்று
சொன்னமொழியைக்கேளாமற் றன்னபிமதத்தன்படிப்
பன்னகசயனெழிற் பொன்னடிகளையேமகன்
துன்னவுன்னிப்பன்னிநிதம் சின்னசாமிதாசனைப்போல் சே

வசனம்.

சொக்குபாய் இவ்வண்ணம்கருதி ஊருநில்நடந்துகொண்டிருக்கும் கபீர்கோபன்னமுதலியவருடன் திருநாராயணபுரம்போய்வருவோம்வாருங்களென்றுவீட்டில் கணவன்மாமிமானாரையும் பார்த்துச்சொல்லக்கேட்டவர்கள்கோபித்து வைதடித்ததுமன்றி ஒருவேளைசொல்லாமல் நடந்தாலும் நடப்பிப்பாளென்று கூடத்துக்கம்பத்திலிறுக்கி முறுக்கி கட்டிவிட்டு உள்ளேபோகக்கண்டு இவளுடையவன்பினால் பகவான்சதுரப்புஜராய் சங்குசக்கர கதாபாணியாய் பீதாம்பரதாரியாய் கிரீடகுண்டலா நூபுர கேயூரகௌஸ்து பஹாராதிபாருயணகதிதருய் தரிசனங்கொடுத்து அம்மாசொக்குபாய்நான் நிஜரூபமாய்த்தரிசனங்கொடுத்திருக்க எனதர்ச்சாரூபத்தில்இன்னமேன் உனக்கிச்சையென்றருளிச்செய்ய அதுநிரந்தரமாய்ச்சேவிக்கத்தக்கினரூபமாகையால் அதிலிச்சை மாறாதென்று சொல்லக்கேட்டு ஆனால்நான் உன்னைப்போலரூபிகரித்துஉனதுகட்டையவிழ்த்துவிடுகிறேன் உனக்குப்பதில் என்னைக்கட்டிவிடு நீபோய்வாவென்றருளியபடியேரூபிகரித்துகட்டையவிழ்த்துவிட அவள்எம்பெருமானைக்கம்பத்திற்கட்டிவிட்டுப்பகவான்மாயையால் ஒருத்தர்கண்ணிலுந்தென்படாமற்போய் கோபன்னமுதலானவர்நடந்துகொண்டிருக்குமிடம்

வந்துசேர அவர்கள் இவளைப்பார்த்து உனதுடம்பு மெலிந்து நலிந்து சூடுகொண்டிருப்பானேனென்று கேட்கும்போது சொக்குபாயி நடந்தவிர்த்தாந்தத்தைச்சொல்லவினவி யிவளுடைய பக்தியையும் இவளுக்காக பகவானை கட்டுண்டதையுமெண்ணி வேதங்களுக்கும் பிரமாதி யோகிகளுக்குங் கட்டுப்படாத பரப்பிர்மஹம் கட்டுண்டதன்றோ இவளுடைய பாக்கியமேபாக்கியம் இது நமக்குக் கிடைக்கவில்லையே யென்றுருகிக் கபீர்தாசரும் இராமதாசரும்சொல்லுதல்.

கீர்த்தனம்-௧௧.

இ-ம்-இந்துஸ்தான்-காபி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

கட்டுண்டானு கண்ணன் மணிவண்ணன்

அநுபல்லவி.

கட்டுண்டானு
எட்டக்ஷரத்தை எண்ணுஞ்சொக்குபாய்
இஷ்டம்நிறைவேற இவனங்குபோய் கட்டு

சரணங்கள்.

௧, வரபாக்கிய வாதிசோதியாலே
உரலிலேகட் டுண்டதுபோலே கட்டு

௨. கறைக்கண்டன்கஞ்சன் காணாததேவன்
மறைக்குமெட்டாத மகானுபாவன் கட்டு

௩. மனங்குவிந்து வரவரநான்
எனத்தவரிடம் தங்குந்தாள் கட்டு

௪. சின்னசாமியுள்ளம் சேர்ந்தவனென்று
சொன்னசாமிகட்கும் சுலபமாய்நின்று கட்டு

வசனம்.

இந்தப்பிரகாரம் சொல்லிச் சொக்குபாயையுங்கூட அழைத்துக்கொண்டு கபீர்முதலியவர்கள் திருநாராயணபுரத்திற் சேரும்போது பகவானைப்பாடுதல்.

கீர்த்தனம்-௧௨.

வடமொழி-இ-ம் தேசிகதோடி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

பாலயகிரு பாலயமாம்

அநுபல்லவி

பாரத்பாதர மங்களகர

சரணங்கள்

க பரமதயாசமுத்ர ராமபத்ர பா
உ பதங்குலகலச பாராவாரசந்த்ர ராமசந்த்ர பா
௩ பங்கஜதளவிமலோசன சங்காசங்கடமோசன பா
ச பாபஹரநாமதேய பார்வதீசபாகதேய பா
ரு பாங்கேருஹபவவந்தித பாபத்மசுபசரித பா
௬ பாலிதசின்னசாமிதாஸ பத்மினீசமதயவாஸ பா

வசனம்.

இவ்விதம் பாடிக்கொண்டு திருநாராயணபுரஞ்சேர்ந்து பாகவதகோஷ்டியுடன் பகவானைச் சேவிக்கும்போது கபீர்தாஸர் அய்யனைத் தோத்திரஞ்செய்தல்.

கீர்த்தனம்-௧௩.

பல்லவி.

என்னையெனக்களிக்காது ஞாயமா
இன்னம்மாயமா

அநுபல்லவி.

தன்னையறியாமற் றவித்துவெம்பியும்
உன்னையடுத்துய்ய வுணர்ந்துநம்பியும் என்

சரணங்கள்.

க. இதாலாபத்தி விச்சையில்லாமல்
இந்திரியங்களி லென்றுஞ்சொல்லாமல்
மதபேதமான வார்த்தைசொல்லாமல்
மண்ணுடலைக்கண்டு மயங்கிநில்லாமல்
சத்தமுநெஞ்சை யுருக்க
சந்தோஷமே பெருக்க
சித்தநலமிருளைக் கருக்க
சின்னசாமியா னிருக்க

வசனம்.

இவ்வண்ணம் ஐமவண்ணனைத் துதித்துத்தொழுது உச்சவபூர்த்திபரியந்த மங்கிருந்து உடனே புறப்பட்டுத் திநம்பிவருமபோது

சொக்குபா யவர்களுடன்கூடத் தனக்குமுன் னவ்விடம் போயிருந்த பக்கத்துவீட்டுக்காரி சஹிதையாய் வருதல்.

கீர்த்தனம்-௩௪.

வடமொழி-இ-ம்-சங்கராபரணம்-தாளம்-ஆதி.

பல்லவி.

புனராகதா புருஷோத்தம தரிசனம்தா

அநுபல்லவி.

மனஸ்ஸமாதானங்கி ருத்வா
பானினீசுத்த ஸத்வா புன

சரணங்கள்.

௧ நாராயணபுரம்மலங் கத்வா
நாராயணமாநந்தம் நத்வா
பாராயனசுகிர்தகீர்த்த தத்வா
பாபம்ஹித்வாபத்ம மத்வா புன

௨ சர்வேசுவரம் ஸ்தம்பேபத்வா
ஸஜ்ஜனசேவா மதவனில்பத்வா
கிர்வாணப்ரதேய மிதிபுத்வா
நிகடக்கிரஹஸ்த்யா அஹவத்வா புன

௩ பன்னகசயனு பிரசிதகீதா
பாவக்ஞர்பாம் கும்ணும்பதா
சின்னஸாமிஸம் ஸேவிதபூதா
ஸ்ரீசொக்குபாயி திவிக்கியாதா புன

வசனம்.

இவ்விதம்வந்த சொக்குபாயையழைத்துக்கொண்டு கபீர்கோபன்னு முதலானவர்கள் கோமளபுரமென்னும் அக்கிராரத்தின் வீதியில் பஜனை பண்ணிக்கொண்டு வரும்போது அவ்வூரார்களை வரும்வந்து வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருக்க இந்த சொக்குபாயி புருஷனும் மாமன் மாமியும் வெளியில்வந்துபார்க்கும்போது நாலைந்துதினமாய்த் தங்கள் வீட்டில் வசித்துக்கொண்டிருந்த மாயாசொக்குபாயும் மெள்ளவந்தெட்டிப்பார்க்கும்போது அவர்களிரண்டு சொக்குபாய்களைக்கண்டு ஆச்சரியமடைந்தசமயத்தில் மாயா சொக்குபாயி மறைந்துவிட நிஜசொக்குபாய் தனது கிரகம்வந்துசேரக்கண்டு அவளால் முன்னடந்த சேதிகளை யறிந்துகொண்டு அம்மூவரும் கபீர் முதலானவர்களுடைய சந்நிதியிலுருகுதல்.

கீர்த்தனம்-௧௫.

இ-ம்-முகாரி-தாளம்-ரூபகம்.

பல்லவி

மோசம்போனோமே மூவரும்
மூடர்களானோமே

அநுபல்லவி

நசனேடுமலர் வாசனறியாமல்
இன்னந்தேடுமெவ னென்றுகுறியாமல் மோச

சரணங்கள்.

௧ செப்பியபடிக்குச் செய்ததென்னபொய்யோ
இப்படிச்சோதித்தா லென்னசெய்வோமையா மோச

௨ சொக்குபாயுருவம் துன்னியவன்திரு
விக்கிரமனென்று மேவாமற்பெரு மோச

௩ திருநாளென்னச் சிறுக்கியென்றுபேசி
ஒருநாழிகையையோ வோயாமலேயேசி மோச

௪ கணிசமில்லாமற் கண்டபடிவைது
துணையணைத்துந் தோய்த்திடச்செய்து மோச

௫ களபகஸ்தூரி சந்தனந்துவொழு
துளபமெங்கென்று சொல்லிச்சொல்லிமுழு மோச

௬ ஆபாதிகளைச் சருக்காகக்கொண்டு
வாயார்ப்போமென்று வகைவகைவிண்டு மோச

௭ தனவனுங்கோபந் தரிக்கும்படிக்கு
இன்னசாமிகூடச் சிரிக்கும்படிக்கு மோச

வசனம்.

இவ்வண்ணம் உருகக்கண்ட மூவரையும்நோக்கி கபீர்தாஸர் அவர்களுக்குப் பத்திமார்க்கத்தையுபதேசித்துச்சொக்குபாயினது பெருமையுஞ்சொல்லி அவர்களால் பூஜைகளைப் பெற்றுக்கொண்டு புறப்பட்டு மார்க்கத்தை யனுவர்த்தநத்துவரும்போது கோபன்னு முதலானவர்கள் கேட்க ஸ்வானுபவத்தை வெளியிடல்.

கீர்த்தனம்-௧௬.

இ-ம்-கேதாரம்-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

௧ அடக்கியாண்டவனேநிரதிச யானந்தத்தாண்டவனே
மடக்கிக்கொண்டாண்டி பேசாத வகையும்விண்டாண்டி

௨ தனித்துநானிருக்கஎன்னை யவன்தழுவிக்கொண்டாண்டி
இனித்தவிரவிடேனென்றுறுதி யெனக்குரைத்தாண்டி

௩ பேசாதிருப்பதுவேரின்பம் பேசநேராத
பேசாமற்பேசாமலிருக்கும் பேரின்பம்வாராதே

௪ என்றுரைசெய்தாண்டிஎன்னைச்சுற்றி யிருளைக்கொய்தாண்டி
அன்றுரைபெய்தாண்டிபரிபூர ணனந்தமெய்தாண்டி

௫ ஆசையினாலுனக்குச்சம்பவித்த தாகமென்றாண்டி
பூசையரிந்ததனால்வந்தது போகமென்றாண்டி

௬ தோணுவதுபொய்யென்றொதுக்கச் சுகமுண்டாகாதோ
காணுவதொன்றுமில்லாப்பதம்பெறக் கபடம்போகாதோ

௭ நீயாய்நானுகிநீயாய் நீயும்நானுமாகி
நீயுநானுமாய்வகையென்றகற்றி நிலைத்தவன்யோகி

௮ இதையன்றியோகமில்லையென் றியம்புமன்னாண்டி
எதையுநம்பாதேயென்னை யென்றுசொன்னாண்டி

௯ இந்தவகைக்கலந்தசின்னசாமிக் கென்சுயமென்றாண்டி
சொந்தமாயிந்தவகைக்கலப்பது ஜாலபமென்றாண்டி

இதுவுமது-கீர்த்தனம்-௧௭.

இ-ம்-பியாகு-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

பேசாதிருப்பதேசுகம்மனதே
பிள்ளையொன்றைக்குறியாதே என்னைவிட்டுப்பிரியாதே
ஆசாபாசத்திலழுந்தி மனதே
அங்குமிங்குந்தேடித்தேடி யெங்குநிலைக்காமலோடி
வேசாறியலையாதே மனதே.
விஷ்ணுவென்றுஞ்சிவனென்றும் விஷ்ணிக்குஞ்சபவனென்றும்
ஆசாரியனென்றும் பாவனைபண்ணாதே

அக்கினியானியவனென்றும் சுக்கியானியிவனென்றும்
பேதபுத்தியடையாதேயர்விசேஷ
பிரமத்துக்குப்பேதமில்லை காமத்துக்குண்டென்றுஞ்சொல்லை
நிதானித்துநீதானே கண்டுகொண்டு
நிலையாமலிதைத்தள்ளி யலையாதேதுள்ளிதுள்ளி
எழுந்துலக்கைகொடாதேபரம்பொருள்
எட்டுதிக்கிலுந்தேடினாலும் கிட்டுமோகிட்டாதுமேலும்
வானங்காணக்கோபுரமேறும் வாறுபோல
வாதஞ்செய்துபராகந்த போதத்தைவிடாதேயந்த
மகாதெய்வமந்தர்யாமியே பிழைக்கடை
வருந்துவீரியஞ்செய்யும் அருந்துவினையைக்கொய்யும்
ஏகசாக்ஷியான வதிக்கையதிகாரி
எடுக்காமற்றானேவிட்டு விடுக்காதேபாடுபட்டு
ஒன்றுதானென்றாலுமிரண்டை வாரிந்த
ஊதைசின்னசாமி சொன்னதாகையாவதிகமென்னப்
பேசாதிருப்பதேசுகம் மனதே.

கீர்த்தனம்-௧அ.

இ-ம்-சங்கராபரணம்-தாளம்-அடதாளசாப்பு.

பல்லவி.

பாழுந்தெய்வத்தைநம்பிப் பாழாய்ப்போனேனே
பரதேசியானேனே

அநுபல்லவி.

சூழும்பவமதிக துக்கமென்றடமாக
தொலைத்துகர்மபந்தத்தைக் கலைத்திடமாக பாழு

சரணங்கள்.

௧ அதிவில்லாதாசைகொண்டலைந் தெங்குஞ்சென்று
அளவஸ்தைபடும்தகையை யகற்றிநிலையினின்று
குளவிதன்னிறமாக்கும் கொள்கைபோலதுநன்று
கொடுக்கும்பரமசுகங் கொண்டிருக்கலாமென்று பாழு

௨ மணிநதன்சூனிய மந்திரத்தைத்தேகம்
மறந்திருக்கச்செபித்து மகிமையின்பரிபாகம்
சூனியக்காரன்வீடு சூனியமென்றுலோகம்
சொல்லும்படிக்கிந்தச் சுகமுண்டானதேயோகம் பாழு

௩. தானிறக்குமருந்து தானேதின்றுமுசஹீக்கும்
ஜடரூண்டோவெனுமுறை தானெனப்படிசஹிக்கும்
தானிறக்குமருந்து நானேதின்றுசஹிக்கும்
நலத்தாடிசின்னசாமி நாடிக்கூடிச்சஹிக்கும் பாமூ

வசனம்.

இப்படி ஸ்வாநுபவத்தை வெளியிட்டுக்கொண்டுவர்க கபீர்தாஸரோடு கோபன்னுமுதலானவர்கள் மார்க்கத்திலோர் நதிதீரத்தில் வேறேயிரங்கித் திரைகட்டிக்கொண்டு தனிமை பிரயத்தனம்செய்யும்போது கோபன்னுதீர்த்தமாடி நெல்லிமறத்தடியில் திருவாராதனம்செய்துக்கொண்டிருக்கும்போது கபீர்தாஸர்வந்துசீதாலட்சுமண சமேத ஸ்ரீராமவிக்கிரகத்தைத் தூக்கி நதிசலத்தில்விட்டெறியக்கண்டுகோபன்னு மனந்தளர்ந்து என்குலதனத்தைவிட்டெறிந்தீரேஎனக்கென்ன கதியென்றுசொல்ல உமது குலதனமானால் நீ அழைத்தால் வருமென்று அவர்சொல்லக்கேட்டு கோபன்னுமிகவும்பாடியும்வாரா திருக்க உடனே கபீர் அழைக்க தக்ஷணம் மூன்றுவிக்கிரகங்களும் நதிஜலத்திலிருந்து கிளம்பிப் பூஜாஸ்தானம் வந்து சேரக்கண்டுசந்தோஷங்கொண்டு அடியேனுக்கிந்த அநுபவம்வரவில்லையென்றுபத்தியுடன்பிரார்த்தித்துக்கேட்கும்போதுசகுணபக்தியூர்ஜிதமாய்பகவத்சாக்ஷாத்தியங்கிடைத்தபின்புகிடைக்குமாகையால்அதற்குத்தகுந்த சாதகம்செய்யுமென்றுபதேசித்துக் காசிக்குப்போகயோசித்து அவரைநேசித்து எல்லோரும்பூஜித்து மந்திரத்தையாசித்துஜகத்குருவாய்பிரகாசித்துஇருப்பிடஞ்சென்று தன்குருவாகிய இராமநந்தரைக்கண்டுவணங்கிக்களிகொண்டிருக்க இங்குகோபன்னுபத்ராசலம்வந்துசேர்ந்து பகவத்கைங்கரியகராய் எழுந்தருளியிருக்கும்போது கஉ-வருடமும் பூர்த்தியாக இவரது இளையமாமனர் பாச்சாவிடத்தில் சித்திரக்கதைகளைச் சொல்லிக்கொண்டிருந்த கௌரவத்தால் சுபேதார்களிடத்தில் வருடத்திற்கொருதரம்போய் அவர்கள் கொடுக்கும் பொருள்களைப் பெற்றுக்கொண்டு சுகசீவனம் செய்துகொண்டிருந்த வழக்கத்தின்படி அவ்வருடமும் மற்றசுபேதார்களிடத்தில் விசேஷபொருள்களைச் சம்பாதித்துக்கொண்டு பத்ராசலம் வந்து ஓர்வீட்டிலிறங்கித் தனதுசேவகனைநோக்கிக் கோபன்னுவைகையோடழைத்துக்கொண்டு வாவென்றனுப்ப அவனந்தப்படியே சொல்லக்கேட்டுத் திருவாராதனஞ் செய்துக்கொண்டிருந்த கோபன்னு இப்போதுவரச் சரிபடமாட்டாது இதுவரையிற் பார்க்கவேண்டுமென்கிற அபிப்பிராயமிருந்தால் அவனையிங்கே வரச்சொல்லு

போவென்று சொல்லக்கேட்டு அவன் அப்படியே வந்து சொல்லக் கோபித்து அப்போதே புறப்பட்டு அருகிருந் தவ்வூரில்போ யிரங்கிப் போஜனம்பண்ணிக்கொண்டு மறுநாள் பாச்சாவிடம்போய் சித்திரக்கதைகள் சொல்லிக்கொண் டிருக்கும்போது பாச்சா இவனை நோக்கி வெளியில் சஞ்சரித்துவந்தீரே எங்கெங்க சுபேதார்களுடையகுணங்கள் எவ்விதங்கள் அதைச்சொல்லுமென்று கேட்க இவன் மற்று சுபேதார்களெல்லாரும் மகாயோக்கியர்கள் பத்ராசல சுபேதாரனை கோபன்னு மாத்திரம் மிகவும் அயோக்கியனுப் சர்க்கார் பீதியில்லாமற் பணத்தைத் தாறுமாறுசெய்து தங்களிடத்தில் சொல்லிப்போனபடிக்குப் பனிரெண்டு வருடம்பூர்த்தியாயும் பணத்தைச்செலுத்தாமலிருக்கிறனென்று கார்ப்பண்யத்தால்சொல்ல தக்ஷணம் முன்மொழியைக்கொண்டு தாகீதுபிறப்பித்து இரண்டுசேவகர் வசமாய்கொடுத்து நாளன்றையதினம் கோபன்னுவை நம்மிடம் ஹாஜர்படுத்தவேண்டியதென்று சொல்லக்கேட்டு நாளையதினங்காலையில் போவோமென்று சேவகர் வீடுபோய்ச்சேர முனிகள் வீடுவந்த தக்ஷணம் கோபன்னுவினிடத் தன்பினுல்சேதியை இன்றிரவிலேயே தெரிவிக்கவேண்டுமென்று கருதி ஒரு பிராமணனையனுப்ப அவனதிவேகமா யிராத்திரி பனிரெண்டுமணிக்கெல்லாம் கோபன்னுவினது திருமாளிகைவந்து பகவத் ஜனம் பூர்த்தியானபின்பு கீர்த்திமிகுந்த கோபன்னுவைநோக்கி ஆர்த்தியுடன் பிராமணன் சொல்லுதல்.

கீர்த்தனம்-௧௬.

இ-ம்-இந்துஸ்தான்காபி-தாளம்-ஆதி.

பல்லவி.

ராமதாசரே-ராம
நாமநேசரே

அநுபல்லவி.

காமதாசன் மாமன்பண்ணிய
கலகமீது காணும்புண்ணிய

சரணங்கள்.

செல்வமென்ப தென்னமெய்யா
தெய்வபக்தி யென்னபொய்யோ

பல்வகை மதிலைக்கொய்ய
பாவியென்ன செய்தானையா ராம

உ. பருஷபாவ புருஷனென்றுவேதா
படைக்கவந்த பாதகனெடுவோதா
வருஷந்தோறுந் தறுவதுபோலேதா
வதனுக்கு முதவிடலாகாதா ராம

ங. மேதா விகளாகியபேரும்
விளங்கும் வேதமுடிவிலூரும்
சீதாபதி திருவடிசேரும்
சேதனர்க்கேது தீதுபாரும் ராம

ச. பலபலவித கலமருளுங்கோசல
பதிரகுபதியே நிதிபத்ராசல ராம

ரு. சங்கையே னிலங்கைவிபீ
ஷணனுக் களித்தசெழும்
செங்கையா னிருக்கநிதம்
சின்னசாமி தாசன்தொழும் ராம

வசனம்.

இவ்வண்ணஞ்சொன்ன பிராமணனுடைய வார்த்தையைக்கேட்டு ராமதாசர் தாமரையிலையிற் தண்ணீர்போல டோலாயமான மனஸகாய்த் தளரும்போது சமீபத்திலிருந்த பெரியோர்கள் இருவருக்குத் தைரியஞ் சொல்லுதல்.

கீர்த்தனம்-உ௦.

இ-ம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி.

பல்லவி.

கோபன்ன கோபன்ன
ஆபன்னரக்ஷகனை மறவாத கோப

அநுபல்லவி

ஸ்ரீபன்னசயனனருள் நிறம்பிய
சித்தமொத்தவன் திருவடிநம்பிய கோப

சரணங்கள்.

௧. அகிலேசவரி ஜானகியென்னுந்தாய்
அடிபணிந்துநல் லகத்தினிற்றுணிவாய்
பகிரங்கமாகப் பாச்சாவிடம்போய்
பாக்கியைபைசல் பண்ணிவருமோய் கோப

௨. சிந்தையென்பது ஜெகத்திலவருக்கும்
க்ஷேமகாமன்று தேகத்தையுருக்கும்
எந்தைமுகந்தனை யிணங்காதிருக்கும்
சனருக்கன்றோ விடரேபெருக்கும் கோப

௩. சுந்தரமாம்ஜப சூத்திரங்கரந்தன்ன
துளசிமணிமாலை களத்தினிலென்றுமின்ன
சந்ததமும்பமானந் தபதவசனன
சாமியாமுமக்குப் பூமியிற்பயமென்ன கோப

வசனம்.

இந்தவகை ஆபன்னசரண்யராயும் ஆஸ்ரிதஜனரக்ஷகராயும்நித்யபுண்பராயுமிருக்கின்றஎம்பெருமானுடையதிருவடியைநாம்முக்கியமாய்நம்பியிருக்கநமக்கேதுபயம்அஞ்சாதேயுமென்றுமறுபடியும் அந்தப பெரியோர்கள் கோபன்னவைப்பார்த்துச் சொல்லுதல்.

கீர்த்தனம்-௨௧.

இ-ம்-சௌராஷ்டிகம்-ஆதிதாளம்.

பல்லவி.

அவனடிக்கமலஞ் சரணம்
அதுபகவாஸகர தாரணம்

அநுபல்லவி.

சிவனுமிருந்துங்கைத் துடைப்பவனெவனோ
திசைமுகனுமிருந்து படைப்பவனெவனோ அவன

சரணங்கள்.

௧. அளிக்குந்தொழிலைத்தா னேற்பவனெவனோ
அகிலபாபங்களையுந் தீர்ப்பவனெவனோ
களிக்கும்படியன்பரைச் சேர்ப்பவனெவனோ
கடைக்கண்ணாலெப்போதும் பார்ப்பவனெவனோ அவன

உ. காரணகாரணனு மன்றவனெவனோ
காரணக்காரணமேயாய்ச் சென்றவனெவனோ
ஆரணங்களுங்காணு னென்றவனெவனோ
அறிவினுக்கறிவாகி நின்றவனெவனோ அவன

ங. நலஞ்செயயும்பேருக்குள்ளே நற்குணனெவனோ
நாரதமருக்குள்ளே நற்குணனெவனோ
உலகுருவெனும்போது பற்குணனெவனோ
உற்றுப்பார்க்கும்போது நிற்குணனெவனோ அவன

ச. எங்குநிறைந்ததேவர் கோனவனெவனோ
எந்தையுருள்ளடக்கும் ஹானவனெவனோ
செங்கமலக்கண்ணுள் வானவனெவனோ
சின்னசாமிகவிக்கு ளானவனெவனோ அவன

இவ்வண்ணந் தைரியஞ்சொல்லியுந் தெளியாதிருந்த கோபன்ணவைப்பார்த்தங்கிருந்த பெரியோர்களிலொருவர் ஏன் அஞ்சுகிறீர் ஜகத்குருவாயும் சேஷாம்சபூதராயும் ஜகதுஜ்ஜீவன நிமித்தம்வசிஷ்டாதவைத்தரிசனஸ்தாபனசரியரா யெழுந்தருளியிருந்த திவ்யமங்களமூர்த்தியான உடையவருக்கு ஆதிகாலத்தில் யாதவப்ரகாசனல் ஜனித்த ஆபத்திலேயின்றுமவதரத்தக்ஷணம் ரக்ஷணஞ்செய்யும்சுபலட்சணமுடைய ஸ்ரீவத்ஸவக்ஷனன புண்டரீகாக்ஷன் பக்தபக்ஷபாதியானையால் உம்மையிந்தஸ்வலய ஆபத்திலேயின்றும் உத்தாரஞ்செய்யானோ வென்னவினவி யாச்சரியமடைந்த தெப்படியென்று கேட்க அவரந்தரங்கபக்தியுடன் அருளிச்செய்தல்.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

உடையவர் சரித்திரம்.

விருத்தம்.

பூமாதுநாதனது நியதனத்தாற்
   பூதபுரியினிலரித கோத்ரனெனுஞ்
சீமானுமாசூரி கேசவாரியன்
   தேவிகாந்திமதிமனங் களிக்கவன்பர்
பாமாலையிடத்திருவாதிரையிற்சுக்ல
   பஞ்சமிபார்க்கவ வாரங்கூடுநாளில்
ராமாநுஜாசாரிய னவதரித்த
   நலஞ்சொல்வேன்வாதுப்ரபலஞ்சொல்வேனே.

கீர்த்தனம்-உஉ.

இ-ம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி

கண்ணிகள்.

மங்களகலிநாலாயிரத்தீரைம்பத்தொன்பது
   வருஷங்களானதின்மேல்
பிங்களசைத்திரசுத்தபஞ்சமியாருத்திரை
   பிருகுவாரத்திலொருக்காலே
தேஜோமயமாயவதரிக்கப்பெரிய
   திருமலைநம்பியங்குவந்தார்
ஓஜோபலங்கண்டிளையாழ்வாரென்
   றொருதிருநாமந்தந்தார்

அன்னப்ராசனம்செள்ளமுபநயனங்களி
யானசடங்குகளுங்கண்டு
உன்னமதியொடுவேதங்களடங்கலும்
ஓதிப்ரேமகிழ்கொண்டு
கமலநயன்பட்டர்மளிக்கச்சுதராயந்தக்
காலத்திற்கோவிந்தபட்டர்
அமலகுணங்களுடனவனியிற்றோன்றினர்
அகிலரும்புகழ்கின்றவசிஷ்டர்
அவருக்கும்பெரிய திருமலைநம்பிதானே
யளித்திட்டனர் திருநாமம்
குவலயத்திற்சின்னசாமிமுதற்சேதன
கோடிகளிக்குமிதுக்ஷேமம்.

விருத்தம்.

பண்டுபாக்கியவல்லிப்பகவான்வைசம்
பாயனமுனியிடம்வந்ததுபோற்றிவ்ய
தண்டுழாய்முடிவிஜயராகவன்வாழ்
சம்பாதியின்தநுஜன்றீர்த்தமென்னும்
வண்டுலாவியசோலைநகரில்லாத
வப்பிரகாசன்யமாத்தயதியவன்பால்
அண்டுகொளாமரைப்பொருளையறியவேண்டி
யடுத்திட்டார்அத்யயனந்தொடுத்திட்டாரே.

கீர்த்தனம்-௨௬.

இ-ம்-கமாசு-தாளம்-ஆதி

பல்லவி.

யாதவப்பிரகாசனிடத்தில் ஓதவந்தாரே

அநுபல்லவி

வேதசாஸ்திரங்களை யற்புதமாய்
விதம்விதமாய்ப் பதம்பதமாய் யாத

சரணங்கள்.

௧. நமஸ்காரம்புரிந்து அகம் மமகாரஞ்சரிந்து
கமனீயமலர் களடிசொரிந்து
கலைவல்லவனென்று தெரிந்து யாத

உ. சுபார்த்தமேதும் விடுங் தபார்த்தவாதும்
உபாயத்தினு லுரைசெய்தெப்போதும்
ஒங்கும்வாதிகள்பின் வாங்கும்படியோதும் யாத

௩. தன்னகஞ்சோதிக்கும்வகை சொன்னதைச்சாதிக்கும்
சின்னசாமிதாஸன் றனமும்மோதிக்கும்
சிந்தையுகந்தவர் சிந்திக்கபோதிக்கும் யாத

விருத்தம்.

இந்தவிதங்குருவினிடம்படிக்குநாளில்
பண்ணெயொருதினமிவருந்தேய்க்கும்போதி
லந்தமுருந்தனையவனிகழ்ந்துபேச
வகங்கலங்கிமுகம்வாடியழுதகண்ணீர்
சந்ததமாய்ப்பெருகித்துடையுருகக்கண்டு
சங்கடக்கொண்டேசிலநாள்கழித்தபின்னே
எந்தவிதத்திலுமிவரைக்கொல்லமோசம்
எண்ணினன்யோசனையும்பண்ணினனே.

கீர்த்தனம்-உ ௭.

இ-ம்-முகாரி-தாளம்-ஆதி.

பல்லவி.

எண்ணின-யோசனை-பண்ணினன்

அநுபல்லவி.

மண்ணிலிவனிருந்தா லிவ்வண்ணம்
மதமீடேறுதென்றே யெண்ணம் எண்

சரணங்கள்.

க. மங்கைகாந்திமதி மைந்தனையுள்ள
சங்கையில்லாமற் கங்கையிற்றள்ள எண்

உ. சாஸ்திரங்கற்ற சந்நியாசியல்ல
பாத்திரரிவரிக்க படமாய்வெல்ல எண்

௩. தன்னடியாரோடு சந்தோஷமேவி
சின்னசாமிபதந் தெரியாப்பாவி எண்

விருத்தம்.

வந்தியானந்தனமென்பதுபோலென்றும்
    வாக்கியார்த்தஞ்சொல்லியவன்வழியிலேகை
பந்திடாயடியார்கள்வரக்கோவிந்த
    பட்டாவனதுகபடஞ்செய்யாமலங்கே
சந்தியாவந்தனஞ்செய்யாமலங்கே
    தவித்தெங்குந்தீர்த்தமில்லாதிருக்கவாடி
விந்தியாடவியிலொருமாத்தின்கீழே
    வெந்தும்பினார்கண்களினீர்ததும்பினாரே.

கீர்த்தனம்-ஊ௫.

இ-ம்-ஆனந்தபைரவி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

என்னமய்வருமோதுணை
ஈஸ்வரக்கருணை

அநுபல்லவி.

அன்னமாகாரமில்லாமல்	மனத்தில்
அச்சமடிக்கடிமிச்சமாம்	வனத்தில் என்

சரணங்கள்.

க.	புலிநரிகாடிகள்வாசம்	புரிவதன்றேவித்தேசம்
	கிலிவிடுவதுபிரயாசம்	கிட்டுமென்றேமோசம்
	சலித்திட்டாமற்படிக்குச்	சின்ன
	சாமிதன்னிடமே	துன்ன
	மலினமகன்றப்ப	சன்ன
	மதியோடெங்காளு	முன்ன என

விருத்தம்.

இப்படியேயிளையாழ்வான் றுதிகள்பேசி
    யிருள்சூழ்ந்தவிடத்திலிருந்திடவன்பாக
மைப்படிகண்பெருந்தேவியுங்கஜேந்திர
    வரதனும்வேடுவச்சியும்வேடனுமாய்வந்தே
செப்படிவித்தையைப்போலக்காஞ்சிதேசஞ்
    சேர்த்துமறைந்திடவிழித்தாச்சரியங்கொண்டு

மெய்ப்படியிந்த மனதினிலாண்டவனை நன்றாய்
வேண்டினார் பவக்கடலைத்தாண்டினாரே.

கீர்த்தனம்-உசு.

இ-ம்-முகாரி-தாளம்-ரூபகம்

பல்லவி.

இந்தப்பக்ஷம்மறவாதே
எந்தவேளையுமென்மீதே

அநுபல்லவி.

சந்ததமுனது சரணாவிந்தம்
சிந்தையிலிருக்கச் செய்தாலேபந்தயம் இந்த

சரணங்கள்.

க என்னைக்கொல்ல வுன்னித்துகை
யில்லாவடி யாரொடுகிகை
தன்னோடு பூணவில்லாப்பகை
சந்நாசி ளுள்ளபுகை. இந்த

உ. துன்னபயங் கொண்டேகுகை
சேர்ந்திடு மக்கணமேனகை
சின்னசாமி கொள்ளத்தகை
சேராமற் செய்திடும்வகை இந்த

சந்தவிருத்தம்.

இளையாழ்வானிந்தவிதந் துளிக்கவந்தே
யிவரைவிடபா தவப்ரகாசனெண்ணம்
விளையாமலகங்கலங்கிக் கங்கையாடும்
வேளையந்தக்கோவிந்த பட்டர்கையின்
முளையாதசிவலிங்கம் மாயையலே
முளைத்திடக்கண்டுடன் குருவி னேவல்கொண்டே
வளையாதவழிவந்து ப்ரதிஷ்டைசெய்து
வலம்வந்தார் மழலைமங்கலம்வந்தாரே.

சந்தவிருத்தம்.

மழலைமங்கலம் வந்துவிழிகளாய்த்
தழலைப்பாலுவைச் சந்தானைத்தாங்கினான்

கழலைநம்பினற் களத்திநாயகன்
நிழலைப்பற்றியே நேசித்திருந்தவர்.

கீர்த்தனம்-௨௯.

இ-ம்-நாதநாமகிரியை-தாளம்-ஆதி.

பல்லவி.

உடனேநடந்ததைக்கேளும்-அநுபவரே
ஓஸ்ரீதாலைவைஷ்ணவரே.

சரணங்கள்.

ஜடமகியாம்பர தவப்பிரகாசன்
தடமடங்கலுங் கடந்ததீசன்
ராமாநுஜனை ரட்சித்தறிந்தே
ஸ்ரீமானென்றெண்ணிச் சினமதையறிந்தே
காஞ்சிவந்திவர் கமனிய்யதாளில்
வாஞ்சைகொண்டிவர்க் கோதிவருகின்ற
ஆளவந்த வரங்கத்தைவிடுத்தே
காளமுகிற்பரவுஞ் சச்சினகாடுத்தே
இவரைக்கண்டுமகிழ்ந் திருதயந்தணிந்தே
தவத்தோர்க்கருள்வர தனைக்கண்டு ணிந்தே
அரங்கமேகளிங் கரசன்சுதனை
பிரமராட்சதரென்று பிடித்திடவதனை
தடைசெய்யுங்குருவதைத் தடுத்துஜாட
உடையவர்வாக்கிய பூணர்த்துவிட்டோட
மகிமைகண்டவனும் வைஷ்ணவனாகி
மகிழப்பெரியதிரு மலைநம்பியோகி
கேசவிந்தைபட்டறையாட் கொண்டார்
மாவிந்தையென்றெண்ணி மனக்குறைவிண்டார்
தெய்வாதீனமென்று தெரிந்தருள்பூண்டார்
மெய்மகிழ்ந்தன்பரை மேன்மையிலாண்டார்
பொன்னடிகளைநம்புஞ் சின்னசாமிதுரிதம்
பண்ணும்பஞ்சாய்ப்பறக்கப் பண்ணுமிவர்சரிதம். (௨௨)

விருத்தம்.

இவ்வகையிலேவாழ்வானும்
செவ்வையாய்த்தேறிமுன்னோர்
எவ்வகையியம்பினரோ
அவ்வகையனுஷ்டித்தாரே.

கீர்த்தனம்-உ அ.

இ-ம்-தேசிகதோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

நம்பிதிருவடிகை — நம்பினோர்
நற்கருணைநி — நம்பினோர்

அநுபல்லவி.

எம்பிராணியம்பிட — வினவிமெச்சி
யிருமூன்றுரைபொரு — ளருவியதிருக்கச்சி நம்பி

சரணங்கள்.

க. பெண்டுசெய்தமூன்று — பிழையாலில்லறவலை
பிரிந்துபெருமானேவல் — பெற்றுக்காஷாயக்கலை
தண்டுங்கொண்டுமதுராந் — தகத்தேறிசென்றுநிலை
தப்தசங்கசக்கிராங்கி — தாராகிப்பெரியதிருநலை நம்பி

உ. ஹவலிதவதனரா — யரங்கனுரைக்காட்டியூர்
அறியும்படிமூன் — றுவாக்கிரிமாட்டியூர்
வகிமுதலரம்பையர் — வசிக்கின்றமேட்டியூர்
மகிமைபெற்றதென்று — வழக்குந்திருக்கோட்டியூர் நம்பி

ங. பரிமுகதேவனையு — பாசித்திக்கப்படியை
பரிசுத்தஞ்செய்யவ தம் — பன்னிதகிரீடிடியை
தரித்துக்கொண்டுசின்ன — சாமிதாசன்முடியை
தாளலங்கரிக்குஞ் — சாமிராமனடியை நம்பி

வசனம்.

இப்படிக்கு நம்பிகளுடைய திருவடிகளை யாஸ்ரீயித்து ஸர்வக்ஞரான உடையவர் சோழராஜன்சபையில் வித்வான்களைஜயிக்கிற நிமித்தம் அனுப்பப்புறப்பட்டு ஸ்ரீகூரத்தாழ்வானதுபெருமையைத் தெரிந்தமட்டுஞ் சொல்லுகிறேன்கேளும் கோபன்னுலென்றந்தப் பெரியவர் சொல்லுதல்.

கீர்த்தனம்-௨௬.

பல்லவி

கூரத்தாழ்வானைப்போ லேது
குவலயத்தின் மீது

அநுபல்லவி.

தீர்த்தாலகில திரவியங்களோடும்
தேகாபிமானமும் மாகாதென்றுவிடும் கூரத்

சரணங்கள்.

௧. மடியிற்கனமிருந்தால் வழியிற்பயம்
வருமென்றுரை பேசி
மனையாளிடமிருந்த தங்கவட்டிலை
வாங்கியோங்கி வீசி
செடியிலெறிந்துவிட்டு ஸ்ரீரங்கத்திற் கிடந்த
திருக்கோலத்தைக்கண்டு சேவித்திட நடந்தகூரத்

௨. மண்ணையாளுஞ் சோழராசன்சபையினில்
வாதிகளை வென்று
வாசுதேவனே பரனென்றுசாதித்த
வகையறிந்தவ னன்று
கண்ணைவாங்குவேனெனக் கசடனுனை யறிந்த
கண்களாகாதென்று சுழற்றிவிட் டெறிந்த கூரத்

௩. காமாதிகளா ம தம்சத்துருக்
களைநன்றாய் ஜயித்து
கருணையாதிபதியை யாஸ்ரீயித்துக்
கலைகளிலதி ஜயித்து
ராமாம்சமானதால் ரங்கனெனியார்ந்த
ரம்ஞய்யசர ணஸரஸிஜத்தைச் சேர்ந்த கூரத்

௪. திருவரங்கத் தமுதனாரையுடையவர்
திருவடிக்கா ளாக்கித்
திருவரங்கத் தருமாதிகாரமிட்டு
தேசிகன்சீர் தாக்கித்

தருமபுத்திரனென்னுந்தனதுசின்ன சாமி
தாசனுக்கும்பயதத்துவஞ்சொன்ன சாமி கூரத்

வசனம்.

அந்தஸ்ரீ கூரத்தாழ்வானது திருக்குமாரராகிய பட்டர்பெருமையைக்கூறல்.

கீர்த்தனம்-௩௦.

இ-ம்-ஆனந்தபைரவி-தாளம்-ரூபகம்

பல்லவி.

பட்டருக்கேயடிமை பட்டோம்
பரமதத்திலாசை விட்டோம்

அநுபல்லவி.

நஷ்டமில்லாநலம் கண்ணுஞ்சராசர
நாதன்ஹரியென்று காட்டும்பராபர பட்ட

சரணங்கள்.

௧. பிக்காங்குணமென்னுமலேயிற் சிக்காமல்வாலேயில்
புக்காமலசத்தலேயிற் சொக்காதுதனதுநிலேயில்
எக்காலத்திலு மிருந்துபிரபந்த
இச்சைமிகுமால்வா னிதயமுகுந்த
அக்காரவடிசல் விக்ரகமாயிருந்த
அவனிமுழுது மானந்திக்கவந்த பட்ட

௨. உயிர்வியோகநிஷ்டனே தூர்வழக்கிலிஷ்டனே
சர்வமிகுந்துஷ்டனே சர்வக்ஞபட்டனே
நிர்மூடனாக நினைந்தபொருகாரம்
நிறைந்தமண்ணை னிக்ரஹிந்தப்புரம்
பருவதி பாவுமவசரம்

௩. ஏகசந்தக்ராகி தீகராஜப்பாகி
ராகமில்லேயோகி சேகனென்றன்பாகி
லோகமெல்லாந் துதிக்கவேயென்ன
நோன்புக ஞார்த்தால்பின்ன
ஸ்ரீகரிதானென்று சிந்திக்கும்பாபன்ன
சின்னசாமிதாஸ சித்திரப்ரசன்ன பட்ட

வசனம்.

இந்தப் பட்டர்முதலிய பாகவதோத்தமர்கள் பரம்சாரியரா ணபாஷ்யகாரருடைய பாதாரவிந்தத்தைப்பற்றிய பாக்கியத்தைப் பகர்தல்.

கீர்த்தனம்-ருக.

இ-ம்-உசேனி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

தாசரய்யா-தாச-நேசரய்யா

அநுபல்லவி.

பாசமான மூர்த்திய கிநிஜ
பக்தரைப்பாலனம் பண்ணும்ராமா நுஜ

சரணங்கள்.

க. வாசவாகம லாசனஹர
வருணதிலோசு ரக்ஷணதற்பர
கோசலேசுவர குணஙிந்தா
குதூஹபமானன யதீசுவர தாச

உ. மகிமைபெற்றபாவனி சுரதுனி
மந்தபனிமலர்ப் பதஞானக்கனி
அதிபதியாகையா லாரையுந்தனி
யானந்தவெள்ளமட்டும் லட்சுமணமுனி தாச

ங. விந்தையாயரிகளை வெல்லுஸாயக
விமலநாம லரவதாயக
சிந்தைசின்னசாமி தாசாதியாகா
சேதனைபய விபூதிநாயக தாச

வசனம்.

இத்யாதிபாகவதகோஷ்டியுடன் உடையவர் திக்குவிசயஞ்செய்தல்.

கீர்த்தனம்-ருஉ.

இ-ம்-மத்தியமாவதி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

சஞ்சாரஞ்செய்தார்-சத்கிருபைபெய்தார்
சங்கைகளைக்கொய்தார்

அநுபல்லவி.

அஞ்சாவாதிகள் கஞ்சாஜலத்தில்
பஞ்சாய்ப்பறக்கும்படித் தஞ்சாவூர்தலத்தின் சஞ்

சரணங்கள்.

க கும்பகோணந்திருக் கோவிலூரிலொரு
கூட்டமாகவந்து கூடிவாதிக்கவரு
சம்பிரமப்ஜனமெல்லாந் தப்பித்திந்தகுரு
சரணந்தான்சரணென்னப் பொங்கும்
கருணமயவருணலய ரெங்கும் சஞ்

உ வெள்ளைசாற்றிக்கொண்டு வேகமாகடில்லி
மேவிக்கண்ணைவிட யேவியிருக்கச்சொல்லி
கொள்ளைக்காலமுதற் கூடும்பூமிவல்லி
கெஞ்சியதைக்கொஞ்சியதைத் தொழுதும்
டிஞ்சியபூவஞ்சியுடல் முழுதும் சஞ்

௩ நந்திக்கிராமம்ஜகந் நாதங்கோவர்த்தனம்
நாராயணரொடு நானும்வாழும்வனம்
இந்தத்தேசமுமின்ன மெந்தத்தேசமுங்கனம்
யேர்த்துக்கிருபைபார்த்தவரவ ரார்த்தி
தீர்த்துமதஞ்சேர்ந்திடுங்குரு மூர்த்தி சஞ்

௪ அப்பனுக்குச்செங்காழி யளித்துநீட
அன்னைவாணியும்விதிஷ்டாத் வைத்தனைதக்கொண்டாட
செப்பரியவின்பொடு சின்னசாமியும்பாட
செல்வங்கள்பலவகையும் மலவதி
நல்வழியாங்கள்விதந்த யதிபதி அஞ்

மங்களம்.

கீர்த்தனம்-௫௫.

இ-ம்-தன்யாசி-தாளம்-ஆதி.

பல்லவி.

மங்களம்-ஸ்ரீராமாநுஜசார்யருக்கு-மங்களம்

அநுபல்லவி.

பிங்களவஸனரவி பிரமர்க்குமதிசய
பெருமானென்றேத்துமெம் பெருமானருக்கும் மங்

சரணங்கள்.

௧ கட்டார்தன துபதம் சம்பத்தையடையவர்க்கு
கண்ணுமத்திவ்யஞானம் நல்கியடையவர்க்கு
காட்டிவிதங்காஇத்துக் களிக்கும்விடையவர்க்கு
கணபக்தியுண்டாக்கிக் காக்குமுடையவர்க்கு மங்

௨ உலகைப்பாவனன்செய்ய வுதித்தசுரதுனிக்கு
ஒப்பிலாதமகிமை யுதவியமத்தினிக்கு
நலங்களைப்பாடியா நந்திக்குஞ்ஞானக்கனிக்கு
நாகேசுவராவதார லட்சுமணமுனிக்கு மங்

௩ ஆசூரிகேசவா ரியகுமாருக்கு
அகிலவாதிகளையு மகற்றியதீருக்கு
தேசலரவுமெதி சேகரோதாரருக்கு
திசைமுகனுங்கொண்டாடும் ஸ்ரீபாஷ்யகாரருக்கு மங்

௪ தன்னடிக்கமலமே சரணென்றுதாழ்வாருக்கு
சகலசௌபாக்கியந் தந்தேன்றுஞ்சூழ்வாருக்கு
சின்னசாமியைப்போற் சீர்தந்துவாழ்வாருக்கு
சீமையெங்குமபுகழும் ஸ்ரீயிலேவாழ்வாருக்கு மங்

உடையவர் சரித்திரம்-முற்றிற்று.

வசனம்.

ஆப்ன்னசரண்யன் சேஷாவதாரபாஷ்யகாரரை யிவ்விதங்காப் பாற்றினென் றந்தப்பெரியவர்சொல்லியுஞ் சிந்தைதெளிந்துந்தெ ளியாததுமாய்க் கோபன்னு எம்பெருமானைத் துதித்தல்.

கீர்த்தனம்-௫௪.

இராகம்-புன்னாகவராளி-தாளம்-ஆதி.

பல்லவி.

இசயம்புரியவேணும்-உனதுகிருபை
இதிலேதெரியவேணும்

அநுபல்லவி.

சதமயுதத்தொடுநி யுகமர்ப்புதம்நிர்ப்புதம்
சங்கஞ்சிலவழித்துச் சார்ங்கேனுனதுபதம் ஹி

சரணங்கள்.

க பனிரண்டுவருஷத்திற் பலகைங்கரியம்பண்ணி
புனிதனுகநினைத்துப் பூர்த்திசெய்ததையெண்ணி ஹி

உ. கிடைத்திடும்பதமிந்தக் கெடுவிலென்றுநேசித்து
தடையின்றிப்பொன்னுனக்குத் தந்ததையோசித்து ஹி

ங. உமையவளுமானு மோதும்ராமதேயா
சமயதிறகைவிடாதே சாமியாபத்ஸகாயா ஹி

ச. எந்தவேளையினி லென்னவருமோபின்னே
இந்தவேளைதானே யெனதபிப்ராயஞ்சொன்னேன் ஹி

ரு. அதிதூரவெள்ளத்துக் கணைகட்டுவதுபோலே
மதிபத்தாலேமுன்னம் மனுசெய்துகொண்டதாலே ஹி

சு. முதற்காலமெண்ணுமலா மோதித்திருந்தனம்
சாக்காரதெனறும்போது தளர்கின்றதென்மனம் ஹி

எ. வானந்தருமளவும் மானத்துடனேநிதம்
தானதருமஞ்செய்யத் தலைக்கட்டும்மனோரதம் ஹி

அ. மலையாளருகில்வந்தும் இணையளவுமுடமை
தனையிடாமலிருக்கு மெனையாள்வதுன்கடமை ஹி

கூ. சின்னசாமிகளாங்கு சிரவையென்றுசொல்லும்
உன்னருஞ்சுதரைப்போ லுன்னிப்பகலுமல்ல. ஹி

வசனம்.

என்றுமிகவும்மனந்தளர்ந் தையனைப்பாடுமிவரைநோக்கியருகி லிருந்தபெரியோர்கள் அநேகவிதமாய்த்தைரியஞ்சொன்னபின்னும் கோபண்ணா நன்றாய்த் தெளியாதிருக்குதல்.

விருத்தம்.

இவ்வகைப்பெரியோரோது மியல்பானவார்த்தையைக்கேட்
டவ்வகைராமதாஸ ரையனைநினைத்துக்கொண்டு:—

வெவ்வகைப்பாக்கிதிரு மென்றுசிர்திக்கயின்னுள்
செவ்வைபாச்சாவிட்ட சேவகர்வந்திட்டாரே.

கீர்த்தனம்-௯௫.

இ-ம்-வசந்தா-தாளம்-ஆதி.

பல்லவி.

பாச்சாமதமிதுபாரும்
பாக்கிக்குவழிசொல்லவாரும்

அநுபல்லவி.

பேச்சாகிலும் பேசாமற்பணத்தைஉங்கள்
பெருமானுக்கருள்பெருஞ் சினங்கொள்ளுமெங்கள் பாச்

சரணங்கள்.

௧. ஈராறுண்டாம்பின்னே ஸேஷத்
திருபதினாயிரம்பொன்னே தீர்
நோய்த்தருவதாய்முன்னே சொன்னது
நெஞ்சினையோமதியின்னவே என்றும்
பராகுமாசரைப் பகைத்தவர்பயக்களை
சேராவென்றுரைப்பது தெரியாதோ பாச்

௨. திவாணமென்பதுநஞ்சம் என்று
சிந்தையொருக்காலுங்கொஞ்சம் கூட
மேவாதகலையுஞ்சம் இன்று
விளங்கதுகாணும்ப்ரபஞ்சம் முழுதும்
தேவாம்சமோசா தேவனென்றுபன்னும்
பாவாநந்தடில்லி பதிதாகேஷனென்னும் பாச்

௩. ஜெகதீசுவரனிந்தப்பொருளைக் கொண்டு
செலுத்தியுமதுபயவிருளை உடன்
அகற்றுவானேவலனருளை இதில்
அறியவேணுமுமதுதெருளை எதுக்கும்
பகவானையேநமபிப் பாடும்விசுவாசரோ
மாசச்சின்னசாமி தொழும்ராமதாச பாச்

வசனம்.

இவ்விதமாகப் பாச்சாவினது சேவகரிருவரும் அழைக்கும்போ துபிழைக்கவுந்தழைக்கவும், பெருமானைக்கோரிப் புறப்பட்டுப் பாச் சாவினிடம்போய்ச்சேர்ந்தாரப்போதிவரை அவன்நோக்கி முன்னம் சொன்னவார்த்தை பின்னமாகும்படி யின்னம்பணத்தைச் செலுத் தாதிருப்பதென்னயுக்தியென்று பன்னக்கேட்டு இவர்நன்னயமாகச் சலாஞ்செய்து பணம்முழுதும் பிராமணசந்தர்ப்பணமாயும் பகவத ர்ப்பணமாச்சுது உமதுபாவமெல்லாம் போச்சுது பாக்கியமும்வாச்சு தென்றிவர்சொல்லக்கேட்டவன்நகைத்துடனே கோபித்திக்கிட்ட வந்துமூட்டகல்வியளந்ததுபோதும் அந்தமட்டும் மகாயோக்கியர் தானபாக்கிக்குவழிசொல்லும் சர்க்கார் பணத்தையாவது செலுத் தும் அல்லது ஜாமீனாவதுசொல்லிவையும் இல்லாவிட்டால் பனிர ண்டுவருஷம் பந்தேகானுகிடைக்கும், சந்தேகமில்லையென்றுசொல் லிவினவி இவரையனைநினைந்தகம்விநயத்துடனே யாக்கினைக்குப்பய ந்து அதனால்நயந்து உபசாரவார்த்தைச்சொல்லி பணமும் ஜாமீனு ங்கிடையாது பந்தேகானுபத்ராசலத்திலிருக்கவேண்டுமென்றும் நி த்தம்கோதாவரிஸ்நானமும்பத்ராஜலராமபத்ராதரிசனமும் க்ராஹத் திற்போசனமும்நடக்கவும்மற்றகாலத்திறபந்தேகானுவிலிருக்க உத் தரம்தரவேண்டுமென்றுகேட்க ஆத்மாராமப்போரே பணத்தால் அவனப்படியேஉத்தரந்தந்திவருக்குப்பதிலாக வேறொருவன்பேருக் குச் சுபாசந்ததுகொடுத்து இவரைநோக்கி இந்த பனிரண்வருஷத் துக்குள் பணத்துக்குவழிசொல்லாத பக்ஷத்திற் பதின்மூன்றும்வரு ஷம் ப்ரதமதினபாஸ்கரோதயகாலத்திற் பருத்த யானையின்காலால் இடறப்படுவீரென்று பயப்படுத்தியனுப்ப பத்ராஜலத்திற் பந்தேகா னுவில்வந்து பலசேவகர் பாராவோடுங்கூடி பாகவதசிகாமணியா கிய கோபன்னாவென்னவர் பக்திமிகுந்து பகவானைப் பூஜித்தல்,

கீர்த்தனம்-௩௯

இ-ம்-சுருட்டி-தாள-ரூபகம்.

பல்லவி.

கடைக்கண் பாராயோ

கவலை தீராயோ

அநுபல்லவி.

அடைக்கலமென் றடையுமெந்தன்
அகம்பரானந்த சுகம்பெறவுந்தன் கடைக்

சரணங்கள்.

௧ சுபதாருவைச் சுகித்ததெல்லாம்போய்
அபேதஞான மகன்றொருக்காலே
அலைந்துநிலை கலையுமென்மேலே கடைக்

௨ பந்தேகாருவில் பயப்படாதேநில்
வந்தேனென்றோசி மலடிக்கஞ்சும்
மனதினில்வைத்துத் தனதாகக்கொஞ்சம் கடைக்

௩ கீதமும்பாடி நினைத்துன்னைக்கூடி
திரசுகம்பெற்றுச் செமிக்குநதீர்க்க
சின்னசாமிகளி லென்னையுஞ்சேர்க்க கடைக்

இதுவுமது.

கீர்த்தனம்-௩௭.

இ-ம்-பைரவி-தாளம்-ரூபகம்.

பல்லவி,

ராகவாவீ ணாகவா
நம்பினதுவெம்பிப் போகவா

அநுபல்லவி.

தேகவாசனை தீரக்கிருபைபுரி
தேதாவென்றதுந் தெரியாதோஹரி ராக

சரணங்கள்.

௧. பணத்தையுனக்காப் பணஞ்செய்திருக்க
பலவிதபாந்தை படர்ந்துநெருக்க
குணங்கெடத் தருமோசொல்லக்
குலசேகரதீரா ஜலநிதிகபீரவீர ராக

௨. துளசிகபீர் சூகரதாஸர்
துதிசெய்துபரி சித்தராணதேசர்
வளங்கண்டுன்னை வணங்கும்விஸ்வாசர்
மலரடிதொழுதுமிதென்ன மாயஞ்சொலலுப்ரசன்ன ராக

ரு. பண்ணவர்களும் பாடிப்பாடி
பந்தமகன்று நந்தத்தைக்கூடி
தின்மீதென்னுரை செய்தவைநாடி
சின்னசாமிதாஸனும்பல தேவனும்பணிபத்ராசல ராகவ

இதுவுமது.

கீர்த்தனம்-ருஅ.

இ-ம்-உசேனி-தாளம்-சாப்பு.

பல்லவி.

கடனைத்தீர்ப்பதுந்தன்கடனே
காக்கவேணுமிப்போதுடனே

அநுபல்லவி.

அடமாகக்காவலி லடைத்துமவன்பேச்சா
அனலெனத்தடுக்கின்ற தாகையினாற்பாச்சா

சரணங்கள்.

க. பணத்திலாசைபற்றும்போதுபுவிமீது பாகவதரேது
குணத்தையறியாமலீதடிக்கடிவாது கொடுக்கச்செய்ததிருது
பிணத்தையலங்கரிக்கும் பேருக்கள்புதர்து
மணமிகும்பலகமலமகரந்தமன்ன மருவிரோதியாமிகத கட

உ. நரரைவணங்கிநடுங்கிப்ராணனோ டொன்றுநான்கேட்கமாட்டேன்
அரவிந்தபவபுராஹூரபுரந்தராதி ளடியின்மனதைநாட்டேன்
பரதெய்வமாமுன்னைபணிந்துபணிந்து கேட்டேன்
பாரிலுன்றிருநாமம்பாதிற்பக்தனென்றுரைபபது மெய்யாகில்

ங. துருவனுக்குபதமளித்தென்னபொய்யாசொல்லாயப்புதமேயா
பரிதிமகனுக்கும்வீடணனுக்கும்ரசிட்ட பங்கேருக்ஷையா
திருமகளுளகுலதெய்வமே யெனதையா
சின்னசாமியையாளமுத்து சீக்கிரமாகவேயோடிவந்து கட

வசனம்.

இந்தப்படிக்குதுதித்துக்கொண்டிருந்தும் பகவான்கிருபைசெய்யாதிருக்ககண்டுவேதசாஸ்திரபுராணேதிகஸாகாவ்யப்ரதிபாத்திய

ஞானஒப்பற்றகடவுளிராமனென்றும், அவனை நம்பினபேர்களுக்கொருகுறைவுமில்லையென்றும், முன்னவனை நம்பி வெகுபேர்கள் கடைத்தேறினார்களென்றும், அவனுக்கு கைங்கரியஞ்செய்தபேர்கள் அளவற்றசம்பத்தை யடைவார்களென்றும் சொல்லுவதெல்லாம் அபத்தமாகத்தோன்றுகின்றதேயன்றி நபத்தமல்லவென்றுகலங்கி முகம் வாடியயனைக்குறித்து நிந்தாஸ்துதிசெய்தல்,

கீர்த்தனம்-௧௧.

இ-ம்-பியாகடை-தாளம்-ஆதி.

பல்லவி.

நம்பினத்திற்குநல்லஸ்திதியில்வைத்தாய்
நல்லகீர்த்திபெற்றாய்

அநுபல்லவி

எம்பிரானே ஆஹா இந்நாளிலென்னை
இம்மமாத்திரஞ்செய்வாயேயிது போதும்போதுமுன்னை நம்

சரணங்கள்.

௧. ஆர்த்தசரண்யனென்ன றகத்தன்புயிரியாமல்
அனுதினமுந்துதிப்ப நறுந்திடர்பறியாமல்
கீர்த்தனங்களைக்கண்டு கிருபையாகக்குறியாமல்
கெருவங்கொண்டிருக்குங் கிருபணனென்றறியாமல நம்பி

௨. பொதுவானதுதெய்வம் பூஜைசெய்கிடனென்று
புரிந்தருளுமென்றாசை பூண்டதுதெரிந்தன்று
விதானுக்குதவிய விதமெங்கன்மீதுமின்று
விருப்பங்கொண்டுநல்ல வரிதுவகையிற்சொன்ன நம்பி

௩. மகிமையைக்காணாத வரிதுவகையிற்சொன்ன
வார்த்தையானதுசெவி வழியாயித்யந்துன்ன
தகிக்கின்றதிதுக்குச் சரியேமுன்னோர்சின்ன
சாயிகட்குப்பெரிய சாமியேகவியென்ன நம்பி

வசனம்.

இவ்விதம் கீர்த்தாஸ் துதிசெய்தவருடனேபயந்து நீயேபாவனனென்றும், உன்னைநம்பினபேருக்கு ஒருகுறையுமில்லையென்று முபாடகவேதாங்கள் உரைக்கின்றவிஷயம் உண்மையாயிருக்க உள்ளந்தெளியாத நான்உன்மீது தோஷாரோபணஞ்செய்யத்தகுமோவென்றுருகி அபக்ஷாரமணஞ் செய்துகொள்ளுதல்.

கீர்த்தனம்-௬௰.

இ-ம்-தர்பார்-தாளம்-ஆதி,

பல்லவி.

நிந்திதேனென்று விளங்காதே
நெஞ்சத்தில்கோபங்கொள்ளாதே

அநுபல்லவி.

வந்தித்துவந்தித்துச் சிர்த்தித்துச் சிந்தித்து
சந்தித்திடாப்பக்தி மந்தித்து மந்தித்து நிந்தி

சரணங்கள்

௧, எந்தனைபாதிக்கும் பந்தந்தனக்கஞ்சி
இந்தவரைச்சொன்ன நிந்தனையுமிஞ்சி நிந்தி

௨. கைதந்தருண்மாரி பெய்தருளுமெம்மானே
வைதாலுந்தோத்திரஞ் செய்தாலுமுன்னைத்தானே நிந்தி

௩, குன்னமாகநெருக்குஞ் சின்னங்களைமாற்று
சின்னசாமியென்னு மென்னையுங்காப்பாற்று நிந்தி

வசனம்,

இப்படிக்குநானாவிதபாவமாய்த்தெலுங்குகீர்த்தனமனேகம்பாடிக்கொண்டு பந்தேகானாவிலிருக்கும்போது பதினொருவருஷம் பதினொருமாதம் இருபத்தொன்பதுதேதியுமாக முப்பதாந்தேதியாச்சாவிடத்திலிருந்து மறுநாளுதயகாலத்தில யானையின்காலாலிடறுகிறதாக வுத்திரவுவரக்கண்டு சித்தமிகத் தத்தளித்துக் கொதிதருகுசத்தம் துதித்திரங்குதல்.

கீர்த்தனம்-சக.

இ-ம்-புன்னாகவராளி-தாளம்-ஆதி

மங்களம்

க. ரட்சிக்கவேணும் ரவிகுலசலஜ்மித்தி
சந்திரராம — சந்த்ரா
பட்சிராஜவாஹன பக்தஜனார்த்தி
தந்திரராம — சந்த்ரா

உ. பனிரெண்டுவருஷம்பந்தேகானவில்
பார்த்தும்ராம — வேந்த்ரா
இனியாகிலுங்கிருபை வராதோ நிக
ரிலாதராம — சந்த்ரா

ங. ஆலாலமுண்டகாகாலனுமைக்
கருளூர்திவ்ய — நாமா
மேலானதெய்வமென்றநம்பினோன்
வீணாக — லாமா

ச. மதிலொடுகோபுர மண்டபஹேம
வானரங்களுண் — டாக்கி
அதிபணஞ்சில வழித்திடவேர்ப்பா
டானதிந்தப்

ரு. பரதலட்சுமண சத்துருக்கனொடு
பவனாத்மஜன் — றனக்கும்
தரணிவிலிருந்தவ தாரஞ்செய்தவெங்கள்
ஜானகிதனக்கு — முனக்கும்

சு. கல்துகிருமணி மகுடமாராம்பதக்கங்
கவசம்புரியக் — கொண்டு
குளிக்கிக்கொண்டிருப்ப தாப்பனுடமையோ
கூறவேணுங் — கண்டு

எ. மாமன்சகன்னேடப் பந்தசரத
மகிபனனுப்பி — னனே
ராமபக்தி வீணாகாதென்றே
நவில்வது — பொய்தானே

அ. இந்தனைசெய்திடு மகந்காரியென்று
வினைவினிற்கொண் ளாதே
இந்தப்பவக்கடலி லின்னமுமழுந்திட
வெந்தனைத்தள் ளாதே ரகு

௯. என்னசாமியிவன் சாமிதுடராகி
யென்றடிக்கடி நல்லாய்
சின்னசாமிக ளுனக்குப்போதனை
செய்தாரோ சொல்லாய் ரகு

வசனம்.

இவ்வண்ணமுருகி அன்றையதினம் விஷம்சம்பாதித்து வட்டி லில்வைத்துக்கொண்டு இப்பொழுது பானஞ்செய்தால் ப்ராதகால ம் ஒருவேளை பஜனையில்லாமற்போகுமாகையால் அந்தக்காலமுமப ஜித்து உடனேவிஷபானம்பண்ணினால் யானைபின்காலாவிடறப்பா ச்சா வருகிறதற்குமுன் பிராணன்போய்விடுமென்றெண்ணிப் பகவா னைப்பாடி யுருகுதல்,

கீர்த்தனம்-௪௨.

இ-ம்-சஹாநு-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

க தாசாதிகண்பாராயோ தயவேனுரைசையயோராயோ
தாசனையாளவாராயோ சங்கடங்களைத்தீராயோ
௨ இந்தநாளுஞ்சோதனையோ இட்டஜனங்கள்போதனையா
எந்தனுளும்வாதனையா இப்படியேமனவேதனையா
௩ துதிசெய்யச்செய்யமாயமா சொல்லுனக்கிதிலோ தாயமா
விதியென்றுரைப்பதுநேசமா வினைருக்குவ தனுபமா
௪ யென்னென்றுரைத்ததுமெய்யாச்சே பெருமானென்கிற [பேர்பேச்சே
சின்னசாமியென்றுபுல்லாயோ சிதைக்காவதுசொல்லயோ

௧

வசனம்,

இவ்வா றுருகியனுத் துக்கொஞ்சந்திருக்கண்வளர்ந்தசமயத்திற் பத்ராசல திவ்யதேசத்தில் எழுந்தருளியிருக்கும் ஒப்பற்ற கோதையாயும் சகலகல்யாணகுணோபேதையாயும் அகிலஜகத்துற்பத்திஹேதுபூதையாயும் அகாதபேதையுமான சீதையென்னும பிராட்டிகோபன்னுவினது மனவேதனையைத் தெம்பெருமானைச்சேவித்துப்புருஷகாரம்புரிதல்.

கீர்த்தனம்-௬௩.

இ-ம்-செஞ்சுருட்டி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

எழுந்திரும்ப்ராண நாதா
தொழுந்தாசனுவோதா

அநுபல்லவி.

கொழுந்தனும்நீரும் பழுதற்றகாருண்யம்
கொண்டுகோறுவதைக் கொடுப்பதன்றேகண்ணியம் எழு

சரணங்கள்

௧ கனிந்துபனிரண்டாண்டும் காவலிலிருந்துவேண்டும்
புனிதனாகிய பூசரனையப்போதே
பொஷீக்காதகுற்றம் போகும்படியிப்போதே எழு

௨ என்நாளுமென்னையம்மை யென்றுந்தந்தையென்றும்மை
அங்காளதியா யடுத்தலனுக்கிம்மை
யருளாதிருக்க லாமாவிதுவாசெம்மை எழு

௩ சாசுவதமாகியகீர்த்தி தாருந்தயாபரமூர்த்தி
ஈசுவரனென்றும்மை யெப்படியியம்புவார்
இப்படிக்குச்செய்தா லெவர்தானம்புவார் எழு

௪ பக்தன்றிருவுள்ளங்களிக்க பாக்கியமவனுக்களிக்க
சித்தமகிழ்ந்திந்தச் சின்னசாமியும்நீரும்
சேவகராய்ப்பாக்கி திரும்வகையைப்பாபாரு எழு

வசனம்.

பிராட்டி புருஷகாலத்தால்புராரிவீதனென்றும்சராசராத்காரனென்றும்நிராகாரனென்றும் சாராகாரனென்றும் தாராதாரனென்று

ம்சுராதிசுனென்றும்முராராதியென்றும்காராராதியென்றும் அசுரராராத்தியனென்றும்புகழப்படும்இராமமூர்த்தியும். துர்க்குணகனபூரிதகுணபாசனாசிக்ஷ விசக்ஷண சுபலக்ஷண லக்ஷ்மணமூர்த்தியும் தேவருங்காவலரும் சேவலரும் நாவலரும்வரிய சேவகவேஷந் தரித்தல்.

கீர்த்தனம்-சச.

இ-ம்-சஹானு-தாளம்-ஆதி.

பல்லவி.

சேவகவேஷம் பூண்டாரே
சேவருரைபைத் தாண்டாரே

அநுபல்லவி.

பாவமலைக்குயிர்ப் பந்தத்திலவுந்த
பாகவதனுக்காகப் பணங்களைசெலுத்த சேவ

சரணங்கள்.

க திருமண்சூரண மலங்கரித்து
திருவுளத்தி லருளினைவரித்து
சருமகடாரி சுத்தியும்பரித்து
ஜல்லடமங்கி நிஜார்தரித்து
இருவர்க்குமிருமையு மீந்திடலமரித்து
திருமகள்மொழிகளைச் செவிகொண்டுசிரித்து சேவ

உ தலைப்பாகையின்மீ துருமாலும்
தாங்கடில்லிபதி யொருக்காலும்
கலைப்பார்சொல்லுமுறை யொருபீலும்
கறவாப்பசுவென்று மென்மேலும்
அலையாமனைத்துட னறியர்திருந்தாலும்
மலைநிலைக்கெதுவென்று மனக்கங்கண்டதுபோதிலும்

ங மாசறுமுனிவர்கள் துதிபேச
வன்னியும்பாஸ் கரனுங்கூச
தேசமிங்குமிவ ரொளிமூச
திருமேனியின்பரி மனம்வீச

நேசகீதாப்பு — நிசயத்தைதயேக
தாசாதிகன்பத்ரா — சலராமதாச சேவ

௬ அன்னவாகன — னபிராமியும்
அயனுமரனுஞ் — சிவகாமியும்
பன்னுமிந்திரன் — பௌலோமியும்
பாஞ்சசன்னியமும் — நேமியும்
இன்னமுள்ளசிலர்க்கு — மிருப்பாம்பூமியும்
தன்னுஞ்சின்னசாமியுந் — துரைபெரியசாமியும் சேவ

வசனம்.

இவ்வகைகுணபூஷண பவதோஷண மிருதுபாஷணராயிவர்சே வகவேஷங்கொண்டு தானேஷனது அந்தப்புரத்தின் எழுவப்பரிகை கதவுகளுந்தாமேதிறந்துக்கொள்ளச்செய்துபோய்அங்கிருந்தசூரா திசூரவீராதிவீரபாரகருக்குத் தரிசனங்கொடாமல் ஸௌதஸோ பனுரோஹணஞ்செய்க்கண்டு அணிமிகுமணிமயஹம்ஸதூளிகாதல் பாச்சயனை தருணத்தில் சப்ணித்துக்கொண்டிருந்த சதியாகியபதி யென்பவள்கோஷாவிலிருக்கும்டேஷாவானையால்எழுந்துமறைவிலி ருந்துபார்த்தாச்சரியங்கொண்டு மாச்சருயம்விண்டு இந்தச்சூரர்க ளால் சர்த்தாவானகர்த்தாவுக்குச்சங்கடம்ஜனிக்கிறதாகவிருந்தால் அப்போது ஆபத்துக்குப்பாபமில்லையென்று பொன்னடிகளைப்பற்றி வணங்கலாமென்கிற பத்தியோடும் கூடிப்பார்த்து பரமானந்த மொ த்திருக்கஸ்ரீராமலட்சுமணர்கள் பாச்சாவினதுமுதுகைதட்டியெழு ப்பியருளிச்செய்யல்.

கீர்த்தனம்-௩௫.

இ-ம்-சௌராஷ்டிரம்-தாளம்-ஆதி.

பல்லவி,

இந்த்ரரும் — டில்லிபதியே
உன்னபாக்கிசொல்லு — பூபதியே

அநுபல்லவி,

அந்தோகம் — கோபன்றுவின்குணம்
அறியாதவர்நீ — ராவையிறுற்பணம் இங்

சரணங்கள்.

க ஈராறுவருஷங் காவலிலே
இருக்கச்செய்தீரொரு லாவலிலே
நேராம்ஜவான்க ளேவலிலே
விரதமாயவரை மேவலிலே
நாராயணனே நல்லளித்தனத்தைத்தரும்
பாராயணபலம் டாருமெழுந்திரும் இச்

உ வீணரிவரென்றெண்ணங் கொள்ளாமல்
விளக்குமெங்களுறையை தள்ளாமல்
மாணறிந்துவரை விள்ளாமல்
மறுபடியுஞ்சேவகர் துள்ளாமல்
காணக்காணமனங் களித்தலுமலைக்கொடும்
நாணயங்களைக்கண்டு நசிதுகொடுத்திடும் இச்

ங வணக்கமாகவிளக் கேர்க்கச்சொல்லும்
வளம்பெறத்தைலத்தை வார்க்கச்சொல்லும்
கணக்கையுமன்றாய் பார்க்கச்சொல்லும்
கஜானாவிவிதைச் சேர்க்கச்சொல்லும்
இணக்கமாகஸன்ன தெழுவச்சொல்லுமிதக்கம்
குணமாகுஞ்சின்னசாமி கொடுத்தனுப்பரொக்கம் இச்

வசனம்.

இவ்வண்ணம் இராமலட்சுமணர்க ளியம்பிய திருமொழிகளை க்கேட்டெழுந் தருமெற்சயனித்திருந்த பத்தினியைத் திரும்பிபார்க்க அச்சங்கொண்டு இவரொளிமிச்சங்கொண்டு வியந்துடன் பயந்து நயந்து கேட்குதல்.

கீர்த்தனம்-௪௬.

இ-ம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

இந்தராத்திரியி லிங்கென்னகாரிய
மெவரையா நீங்கள்
அந்தராமதாசர் சேவகாவ
ரனுப்பவந்தோம் நாங்கள்
சுபநயனரேகுல மடமுறமின்னதென்று
சுருக்காம்சொல் வீரே

தபனகுலமிரா மராஜமதமண்ணன்
தம்பிகளென் ரூரே

காமனைமூஞ்சு மழகராகுமூங்களது
நாமங்களுநரைப் பீரே

ராமகிங்குலட்சமண சிங்கென்றுகுரு
நாதனிட்ட பேரே

ஸ்ரீமந்தரேயுமக்குச் செல்வம்வந்த
சேதிகன்று யோதும்

மாயன்கொடுத்த ஸ்ரீதனமன்றி
மற்றுமில்லை யாதும்

கிம்பலமாய்ச் சீவன்நடக்கிறதா
நிஜமாக வியம்பும

சம்பளமெங்களுக்கு வேறொன்றுமில்லையா
சாமிதனை நம்பும்

இதுவரையிலுநான் கணட துங்கேட்டது
மில்லையுங்கள் சொல்லை

சத்தமும்வீட்டினி லிருப்பவர்வெளியினில்
சஞ்சரிப்ப தில்லை

நியாயெத்தனை நாளாய்ச்சேவகம்
நீங்கள்சொல்ல வேணும்

தலைமறைதலைமறையா யடிமைநாங்கள்
சத்தியமிது காணும்

இருங்களுங்கள்மாதரி மேறுசம்பளத்தினி
லிரண்டு பேரும்

இருக்கிறோமெங்கும் போகிறதில்லைபண
மெல்லாமின் தாரும்

என்றுசொல்லிகுலத்தி னுடபுராரேகுகிழித்
தெழுதும்படிக்குப் பேசி

நின்றுதம்பலமு மிழுந்தக்கணமே
நிகரிகவெனுந்தன ராசி

தங்தேயொய்பவித்து ராம்ராமென்றுரை
சாற்றியுத்ராம் பெற்று

பக்தேகாணுவிலடிமை படுத்திருக்கும்
படுக்கையின்கீழ் வைத்து
அங்கிருந்தவிஷ வட்டலைவிட்டெறிந்
தானந்தித்தொருக் காலே
பெரியசாமியும் சின்னசாமியும்சீதையொடு
பேசினர்பரி வாலே

வசனம்,

இவ்விதம் இராமலக்ஷ்மணர்கள் பத்ராசலம்வந்து சேர்ந்தபின் புமூன்பாச்சாவிடத்திற் செலுத்திய பதினாயிரம் ராமடங்கி லொன் றுமில்லாமல் மறையக்கண்டவன் மிகவுங்கோபங்கொண்டு இதென் ன அனியாயமாயிருக்கின்றது அந்தக் கோபன்னுவைசூரியோதய காலத்தில் யானையின் காலாவிட்டுகிறதே சரியென்றுசொன்னேன் வார்த்தையைக்கேட்டு அவனதுபத்தினியருகில்வந்துயார்த்தாவை ப்பார்த்துச்சொல்லுதம்

கீர்த்தனம்-சஎ.

இ-ம்-சங்காபரணம்-தாளம்-ஆதி.

பல்லவி.

சொன்னதென்னதெரியாதா

அநுபல்லவி

நின்னயமாை சந்நிதிநின்று
ராமசிங்கு லக்ஷ்மணங்கிகென்று சொன்

சரணங்கள்.

க ஆதவகுல மோதனமேசம்பளம்
அண்ணனுஜனென் றெண்ணுமென்றவாதும் சொன

உ பாதிசிற் பாராகடந்தாரே
பத்ராசலமிடம் பாருமென்றுநேரே சொன்

ந கந்தர்ப்பகோடி சுந்தராங்கர்
கம்பீரமாகக் கருணுபங்கர் சொன்

௪ ஸ்ரீதனமென்பது சீதா
தேவிமூலமிதுகூதாடில்லீபுர நாதா சொன்

௫. சின்னசாமி சேவகராகிமுத்து
தேஜோரா சினோகலந்து சொன்

வசனம்.

இவ்விதமாக உத்தமிசெல்லத் தக்ஷணம் மறைந்திருந்தபொருளைமுன்போலவே கண்டுதெளிந்து ஆலோசனை செய்து பத்தினியைப்பார்த்து இனியாஞ்செய்யவேண்டுவது என்னவென்று தானேஷா வினவ வேறென்னவிருக்கின்றது உதயகாலத்தில் ஸ்நானம்பண்ணி பரிசுத்தராய் வேறு ரசிதெழுதிக்கொண்டு பரிவாரங்களோடுசேர் பன்னுவிடப்போய் வணங்கிக்கொடுத்து இராஜ்ஜியத்தாதையும் ஒப்புவித்து அவர்கொடுப்பதைவாங்கிச் சீவனம் செய்கிறதா நலமென்று பலவிதம் சொல்லுதல்.

கீர்த்தனம்-௩௮.

இ-ங்-கலியாணி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

என்வார்த்தையைக் கேளும்
என்நாளுமரசை யாளும்

அநுபல்லவி.

முன்வார்த்தையை முனிந்திந்தச்சோக
மோகமும்மைவிட்டுப் போகபரிவாக என்

சரணங்கள்

௧ திலமுமவாதுமா தங்க
நிகயதாரங்காதிசது ரங்க
பலமுவரதென்றுந் துங்க
பாக்கியந்தந்தினபம் பொங்கி
வலமுஞ்செய்து வணங்கி
வுகாரமது பிணங்கி
குலமும்வண்ண முணங்கி
கூறுங்கொஞ்ச விணங்கி என்

உ. தலத்திலுயர்ந்தது பத்ரா
சலமென்றுகண்டல ருத்ரா
நலவிதிகள் துதித்து முத்ரா
ரசத்தையறிந்து நித்ரா
குலமொன்று மில்லாமல்
குதிர்ந்ததைப் புல்லாமல்
சலங்கொண்டே நில்லாமல்
தடுத்தொன்றுஞ் சொல்லாமல் எங்

ந. பலபேர்பலவித கலகம்
பண்ணுவதுகாதலா மலகம்
நலந்தராதவலமென் றுலகம்
நவிலும்வார்த்தை திலகம்
சிலவழிந்ததை யெண்ணுமல்
சின்னசாமி நண்ணுமல்
அலமென்றே யுண்ணுமல்
ஆலோசனை பண்ணுமல் எங்

வசனம்.

அப்படியே உதயகாலத்தில் உத்தியோகஸ்தர்களை வரவழைத்துக்கோபன்னுவுக்கும் பதிலாகயிருந்து சுயேதானுக்கு பாதரப்பாகீதும்அந்தக்கச்சேரியிலிருக்கும் உத்தியோகஸ்தரெல்லோரும்கோபன்னுவின்யாக்கினைப்படிக்கு நடக்கும்படி வெவ்வேறு தாகீதுகளும் கோபன்னுபேருக்கு சுபாஜாரிதாகீதும் எழுதியனுப்பிவிட்டு தான் வேறுரசீது தயார்செய்துக்கொண்டு பரிவாரங்களோடு புறப்பட்டு பத்ராசலம்சமீபம் வந்துகொண்டிருக்க இங்கே கோபன்னர் ப்ராதகாலத்தில் எழுந்திருந்து விஷவட்டிலைக்காணுமல் மெலிந்துநலிந்து ஸ்ரீரகுநந்தனு விஷபானஞ்செய்து மானத்தோடு யாண்யாணபரித்பாகம்செய்வதுனக்கு சம்மதமாச்சுதன்றோ அடியேன் விஷயத்தில் நல்லகீர்த்தி சம்பாதித்தாயென்றுசொல்லி வெறுத்துக்கொண்டுவந்து கோதாவரியில் ஸ்நானம்செய்து நித்யகருமத்தை நிறைவேற்றிக்கொண்டு கரையேறிபவக்கடலிலிருந்து பக்தஜனங்களைக் கரையேற்றும் பத்ராசலவழியான பகவானைநோக்கி பாடுதல்.

கீர்த்தனம்-சகூ.

இ-ம்-கன்னடா-இந்துஸ்தான்காபி-தாளம்-ஆதி.

நாமாவளிச்சிந்து.

க. பொன்னடிகதியென்று சொன்னவனுயிருக்க
இன்னமலையலாமா ராமா இப்படிச்செய்யப்போமா

உ. கும்பிட்டுக்கொண்டாடி நம்பினதென்னமனம்
வெம்பிலைந்துபோகவா ராகவா விருப்பமும் வீணுகவா

ந. பொல்லாமனமடங்கச் சொல்லாமலிருப்பதேன்
எல்லாருங்கண்டேசவா கேசவா இவ்வகைதினம்பேசவா

ச. பாதிக்கும்பந்தமதைப் பேதிக்காதிருப்பேன்
ஆதிமூலகாரண நாரணு ஆனந்தப்பரிபூரணு

ரு. எப்படியுரைத்தாலும் அப்படிப்புரியாமல்
இப்படிச்செய்தாலேதாவா மாதவா எந்தனுக்கிதோவா

சு செப்பியமொழிகளில் தப்பிதமிருந்தாலும்
ஒப்பியாய்ப்பாவிந்தா கோவிந்தா உளங்குடிவாதாவிந்தா

எ. தாந்தஜனகஜா காந்தமஹாந்தாசு
ஸாந்தஸர்தஸஹிஷ்ணுவேவிஷ்ணுவேஸர்வேசப்ராஜிஷ்ணுவே

அ. அந்நாளுமிந்நாளும் எந்நாளுமெனையாள
மன்னுமதுசூதனு ஸாதனுமாயகுணபேதனு

கூ. பொய்யாமிந்தஜகத்தை மெய்யானதென்றெண்ணச்
செய்யாதேதிரிவிக்ரம அக்ரம சேதனுஜனுதிக்ரம

ம. நயனங்காட்டுமருவை குயங்கணமுகத்தைக்கண்டு
மயங்கச்செய்யாதேவாமனு பூமனு மருவில்லாததேமனு

கக. ஆதராதியதிசயத்தோடு பாதாயணிபணியும்
நாதாதாலோல ஸ்ரீதரா நீதரா நலமுண்டோபாலசோதரா

கஉ. உனையன்றிவேறுதெய்வம் தனையறியேனையா
எனையாளிருடிகேசனே னேசனே இதயகமலவாசனே

கந. சிவனுதிதேவரோ டெவரையுந்தந்தகஞ்ச
பவன்வந்தபத்மநாபனே தீபனேபகசொண்ணுதப்ரதாபனே

கச. மாமோகந்தாராமல் நீமோசஞ்செய்யலாமோ
தாமோதரமுகுந்தனே நந்தனே ஸத்தியவைகுந்தனே

கரு நாமத்தைநம்பினவர் காமமடங்கநல்ல
க்ஷேமந்தரும்பாஷன் பூஷணு சின்னசாமிதாசபோஷணு

வசனம்.

இவ்வாறு முறையிட்டுப் பணமுனக்கர்ப்பண மாச்சுதென்றும் ப்ராம்ஹணனென்று மஞ்சாமற் பாதிக்கத்தொடங்கும் பாச்சாமுதல் பாரஸம்சார பாராவார மக்னர்களாகிய ஜனங்களென்னமாயுஜ்ஜீவிப்பார்களென்று ஜீவகாருண்யத்தாலயனைக்கேட்பதுபோலுரைத்தல்.

கீர்த்தனம்-ருயி

இ-ம்-நாதநாமக்கிரியை- தாளம்-ரூபகம்.

பல்லவி.

அகப்பட்டஜனங்களுக் கென்னகதி
சுகப்படவழிசொல்லுங் சீதாபதி

அநுபல்லவி.

நிகமகோசரனை நின்னையறிந்துநிலையில்
நிற்காமல்மனந் திக்குத்திக்காயலையவலையில் அக

சரணங்கள்.

க அனைத்துலகிலுமுள்ள துங்கத்திலே
அநாமரூபனென்றந்த ரங்கத்திலே
நினைத்துவிடுபடாமற் றங்கத்திலே
நிலத்திலேபற்றிமாம ரங்கத்திலே
புனைந்திதேசுகமென்று போகிக்கும்பொங்கத்திலே
தனைமறந்தசத்தான் ஸம்ஸாரபங்கத்திலே அக

உ நிகரில்லாதபரந் தாமத்திலே
நிச்சயமதிகொண்டு நேமத்திலே
அகளங்கராயினது நாமத்திலே
அன்பொடுநிறைந்த க்ஷேமத்திலே
சகலமென்றிராமற் ருமஸ்துமத்திலே
ஜெகத்தையேநிஜமென்று தெரிவிக்குங்காலத்திலே அக

ங சொன்னவகைசெய்யாமற் பாபத்திலே
துணிந்தடிக்கடிமனஸ் தாபத்திலே

வன்னமலரடிபெரியோர் சாபத்தாலே
மதிமயங்கித்தயங்கிச் சூபத்திலே
அன்னத்திலேபூபத்திலே யாசையடைந்தாயத்திலே
என்னசெய்வோமென்றலைந்து சின்னசாமிகோபத்திலே அக

விருத்தம்.

கரைந்துளமிந்தவண்ண
முறைத்தகோபன்றன்றனை
விரைவினிலாளராம
குரையினைத்துதிக்கின்றாரே.

கீர்த்தனம்-ருக.

இ-ம்-பைரவி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

துரையேயென்னையாளச் சொன்னேன்
சொன்னேன் சொன்னேன்

அநுபல்லவி.

அரைக்கணமுமோயாம லுந்தன்மேலே
யாசையதிக மாகையினாலே துரை

சரணங்கள்.

க நிர்க்குணநிர்மலஞான நிதியாகிஜகத்திற்குநிதான
பற்குணங்களுக்காதாரமோன பதியாகிப்பரிபூரணனே

உ தினமிப்படியுந்தனைச்சிந் தனைசெய்திடுமெந்தனைவஞ்
சனைசெய்திடமாட்டாயெனையுஞ்சாணமடைந்தேனிப்பொழுதென்

ஈ மாரவேளையீன்றிடுமெணி வண்ணமலர்க்கண்ணபிணி
தீர்க்கஞ்சவடிமுடியானை சின்னசாமிதினந்தோறும்பணி

மணிப்ரவாளபஞ்சரத்னம்.

பூமண்டலாதிப ரிரைஞ்சுமடிகோகை
 பூபாலதசரசேந்த்ரன்
புனிதனங்கலைக்கோட்டு பூதேவனர்செய்த
 புத்ரகாமேஷ்டி தன்னில்
காமசதகோடிசுந் தரமுமாயிரகோடி
 கதிரவனைமிஞ்சுமொளியும்

கமலமலர்ப்பூர்த்தகாள முகிலொத்துக்கு
    காசினிதழைக்கவந்த
ராமகல்யாணகுணகாமமங்கயநாம
    ராஜீவதளீலோசனு
ராகேந்துநிபவதனஸாகேதபுரசதன்
    நாகேசவந்திதபதா
ஸாமகானவிலோலகோபாலவனமால
    தரவரதயாளவாள
சரணாகதத்ராணபாராயணம்போஜ
    சரணகருணாபரணனே. க

அத்திகோணன்றுதிமூலமென்றோதகண்
    டபயமீந்தாட்கொண்டனை
அமலகமலப்ரகாதரேணுலாலருவையா
    மகலிகைக்கருள்செய்தனை
கத்தியதுரோபதையினிடாகற்றினை துருவர்
    கனகவரையுரைச்செய்தனை
கர்த்தனேயுனைநம்பிக்கடலினிலும்பிணியிலும்
    கஷ்டமெய்திடனியாயமோ
நித்தியநிர்மலநிராமயநிரஞ்சனவரத
    நிரதமங்களகுணகணு
நிலகந்தரசாபகண்டனுகபுதிசயம்
    நிர்வாணபததாயகா
ஸத்யஸ்வரூபநிஷ்பரபப்ரதாபசீ
    தசரதன்வனஜமிதார
சரணாகதத்ராண பாராயணம்போஜ
    சரணகருணாபரணனே. உ

நீலமணியனையதிருமேனியெழிலுந்திகழு
    நிசிநாதபிம்பமுகமும்
நிகரிலாமார்புமியருமுளரிபரமும் ஜலஜ
    நொத்திரக்கடைப்பார்வையும்
ஆலமுண்டவன்னவாகனு கண்டவனு
    மறியாதகமலபதமும்
அன்புடனேதரிசனந்தந்துபிணிதீர்த்தென்னை
    யாட்கொள்வதுபாரமே

பாலபாஸ்கரகோடிஸமசேலஸஜால
பக்தஜனம்ஸம்ரக்ஷகா
பதிதபாவனநாமபணிபூஷணப்ரோ
பரமபட்டாபிராம
சாலபேதனசண்டகோதண்டசாபத்தே
சனகாதிமுனிசந்துதா
சரணாகதத்ராணபாராயணம்போஜ
சரணகருணாபரணனே. ௩

சுந்தரமிகுந்தநினதாகமேயென்விருத்
துணைநோக்கவாயுன்னையே
சொல்லநின்கீதையேசெவிவினவநின்பதத்
துளதமேநாசிமுகர்
மந்தராசலமேந்தியின்பமுடனன்பரெனு
ளானவாக்கமிகமீந்த
மாயனேகரிவரதாயனே செம்பவள
வாயனேவரமருளுவாய்
இந்த்ராதிசுரமகுடாஞ்சிதமதாம்போஜ
இக்ஷ்வாகுகுலநந்தனா
ஈசலோகேசகந்தர்வசாரணகின்ன
ரேசசமபூஜயராமா
சுந்த்ரமுகிசந்த்ராவிவம்சபாராவார
சந்த்ராதாசனுகூலா
சரணாகதத்ராணபாராயணாம்போஜ
சரணகருணாபரணனே. ௪

வன்னமணியாசனந்தன்னிலெவருங்காண
வாயுராசென்றநயனோர்
வாரிஜபதந்தாங்கவைதேகியென்றென்னை
வாமபாகத்திருக்க
சின்னவர்கள்மூவரோடெழுந்தருளுமையனே
சின்னசாமியெனுமடியேன்
செய்தபஞ்சகவணிப்ராவாளாயிதனைநின்
செவிகொண்டுகேட்டருளுவாய்
பன்னகாதிபசயனஜங்கஜோபநயன
பன்னகாசனவாகனா

பரமபதநாயகாஷ்டவரதாயகா
பார்த்திவேந்த்ராதிப்ர
சன்னராகவதயாளோபரமபுருஷவர
சச்சிதானந்தரூபா
சரணுகதத்ராணபாராயணம்போஜ
சரணகருணுபரணனே.

வசனம்.

என்று பாடிக்கொண்டிருக்கும்போது கொஞ்சதூரத்தில் பரிவாரங்களோடு பாச்சாவருவதைக்கண்டு யானையின்காலாலிடறவருகிருனென்றெண்ணிக் கலக்கங்கொண்டிருந்த சமயத்தில் கச்சேரிஉத்தியோகஸ்தர்கள்வந்துவணங்கிக் கைகூப்பிநிற்க பந்தேகாணு வேலைக்காரி இவர்படுக்கையின் கீழிருந்த பரிமளம்பொருந்திய ரசீதைக்கோபன்னுவின்கையிற் கொடுக்கப்பார்த்து ஆர்த்தியடைந்துபாச்சாவாகிய தானேஷனுக்குத் தரிசனங்கொடுத்துப் பணத்தைச்செலுத்திவந்தநீபயப்படாதேயென்று பகரக்கூடாத பாவியானிருந்தென்ன பிரயோசனமென்று யக்கத்திலிருந்த சேவகனதுகத்தியைபலாத்காரமாய்வாங்கித் தனதுகழுத்தைக் குறித்து நோக்கும்போதுஇராத்திரிகொண்ட வேஷங்கொண்டு ஸ்ரீராமலட்சுமணர்கள்கத்தியினடிநுனிகளைப்பிடித்துவாங்கி அந்தச்சேவகன் கையிற்கொடுத்து கோபன்னுவுக்கும் அங்கிருந்துஎல்லாருக்குந்தரிசனங்கொடுத்துமறையும்போது கோபன்னு மிகவுங் களிப்புற்றவனே யெங்குமிருக்கின்றவனுகப் பார்த்தானந்தித்தல்.

கீர்த்தனம்-நிஉ.

இ-ம்-சங்கராபரணம்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

எங்குமிருக்கிறு னய்யன்
எனையாட்கொண்ட மெய்யன்

அநுபல்லவி.

சங்குசக்ர தரணுகித்தங்கும்
ஜகமீரேழு தலத்திலங்கும் எங்

சரணங்கள்.

பஞ்சபூத பஞ்சதன்மாத்ரகோச
பஞ்சேந்திரி யங்களிடத்திலுமீச

கஞ்சபவ கஞ்சமித்ராமித்ரபர்ச
கரசுரேச தனேசகிணச
குஞ்சரமுக புஞ்சத்திலும்
குகனுள்ளக் கஞ்சத்திலும்
செஞ்சொலதி கொஞ்சத்திலும்
சின்னசாமி நெஞ்சத்திலும்

வசனம்.

இவ்வித மிராமதாச ராநந்தித்துக்கொண் டிருக்குஞ்சமவத்தில் பாச்சா பாதசாரியைக் கொஞ்சதூரத்தி லிருந்து சொல்லிக்கொண்டுவருதல்.

கீர்த்தனம்-ருநு.

இ-ம்-சுருட்டி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

சலாமையா சலாம்
சலாமையா சலாம்

அநுபல்லவி.

பலாமொரட விலாதெலாம்
பண்ணினனென்று கோபமோகுலாம் சலாம்

சரணங்கள்.

வரங்கொடுக்குந்தெய்வ வமுதமெலாம்
தங்கமாக ஸாமிக்கோரிலாம்
குரங்க தரனைப்போலதாம்
குதோமெ்ன் ரூடிலாம்
புரங்களுடனே நீளும் பூமிநமக்குத்தாளும்
திரங்கொண்டிதைக்கேளும் சின்னசாமிநீராளும் சலாம்

வசனம்.

இவ்வித மரியாதைசெய்துகொண்டருகில்வந்த தாநேஷா பயபக்தியுடன் தான்கொண்டுவந்த ரசீதை யிவரிடங்கொடுத்தல்.

கீர்த்தனம்-ருசு.

இ-ம்-ஆனந்தபைரவி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

ராமதாசரே வாரும்
ரசீதிக் தாரும்

அநுபல்லவி.

காம்கோடி சுந்தராமல
கமலக்கண்ணரை ஹிருதயகமலத்திற்கொண்டைவிமல(ரா)

சரணங்கள்.

க. மாடமெருஸமதீரறிந்து வதனாகியஸதயருகந்து
தாமேபங்குத்தனத்தைத்தந்து தக்ஷணத்துக்குவந்து
ஸ்ரீவேவியபத்ராசல தேசத்தினிலேநிர்மல
பூமேவியட்குச்சொல புகுந்தாரையா (ரா)

உ. நீசரிலும்நீசனைப்போல நிர்மலரென்றுமென்பிலே
நேசங்கொள்ளாமலொருக்காலே நிர்ப்பக்தித்ததனாலே
மோசம்வராமற்பத முளரியடுத்தேன்துர்பத
வாசனைவிடுத்தேன்சதசத வந்தனஞ்செய்தேனற்புத (ரா)

ந. நிமிஷமுந்தேவிகவியாபாரம் நீங்காததனாற்கோரம்
நமியேன்செய்தவுபசாரம் சஹிக்கக்கூடாதபாரம்
க்ஷமித்தருளுவதேதீரம் ஸஜ்ஜனங்களுக்கலங்காரம்
திமிரந்தனையீந்நேரம் சேதிப்பதுமதுபாரம் (ரா)

ச. ஜெகதீசுவனவதாரம் திகழுந்திவ்யகுணவிஸ்தாரம்
அகத்தினில்கொள்ளுங்கம்பீரம் அடியார்களுதாரம்
சுககாமமென்றுதுன்ன சூக்ஷமமறிந்தபேர்சொன்ன
சகலமுந்தெரிந்தசின்னசாமியுனக்குச்சொல்வதென்ன(ரா)

வசனம்.

என்றுசொல்லி இராச்சியத்தைஒப்புவித்ததைக்கண்டுசந்தோஷங்கொண்டுஇராச்சியமுழுதும் எனக்கேதுக்குஆளவும் என்னாலாகாதாகையால் இந்த பத்ராசல தாலூக்காவை மாத்திரம் பகவதற்பணமாய்க் கொடுத்தாற்போதுமென்றுகேட்க அப்படியே கொடுத்துப்ரம்ஹோற்சவகாலத்தில் சீதாராமகல்யாணத்தன்று பிராட்டிக்குவரிசைமுதலானது தாங்கள்வம்சபாரம்பரியமாய் கொண்டுவந்து சமர்ப்பிக்கும்படியாயும் தாங்கள்பெண்வீட்டுக்காரரென்றுஇவர்பிள்ளைவீட்டுகாரனென்றும்வழங்கும்படிக்கும் வரம்பெற்றுக்கொண்டுபொச்சா இருப்பிடம் போய்ச்சேர அந்தத் தாலூக்காவில் உற்பத்தியாகும் இருபதினாயிரம்வராகனையும்எம்பெருமானுக்கு தஸ்தீக்

காகயேற்படுத்திப்பரமானந்தங்கொண்டிருக்கும்போது ஸ்ரீகோபன்னு வைக் காதவிஷத்தில் பத்ராசலம் வாசியே கிருபாசமுத்திரரென்று பரமஸாதுக்களும்யேனேயோருமாகியசகலபுருஷர்களும்ஒன்றுகூடி க்கோஷமாக தேவதேவேசனுக்குச் சுபமங்களம் பாடுதல்.

கீர்த்தனம்-டுடு.

இ-ம்-நாதநாமக்கிரியை-தாளம்-ரூபகம்.

மங்களம்.

பல்லவி.

மங்களங்களைப் பாடுவோம்-நாம்
மங்களங்களைக்கொண் டாடுவோம்

அநுபல்லவி.

பங்கஜபத பக்தனுகிய
பத்ரகிரிராம பத்ரஜனுக்குஜய(மங்கள)

சரணங்கள்.

க. அங்கஜகோடிலா வண்யனென்றும்
அகிலதேவாக்ர கண்யனென்றும்
புங்கவர்புகழும் புண்யனென்றும்
புரந்தராதிக ரண்யரென்றும்
வங்கவரையானு மைக்குச்சொல்லிய
வரதனுகிய வரதற்குச்சுப(மங்)

உ. தங்கமலீங்கர் தீரனுக்கு
தசரதசுகு மாரனுக்கு
சங்கையில்லாவில் வீரனுக்கு
சமரிலதிக சூரனுக்கு
பிங்களவசன பெருமானுக்கு
கம்பீரநல்லு தாரனுக்குக்கணிஜம்(மங்)

௩. ராமதாசரிடர் தீரே
நல்லசெல்வங்களுஞ் சேரவே

சேஷமமிகும்படி ஹூரவே
தீவினையனைத்துந் தீரவே
தாமமருளிய தயாநிதிக்கு
ஸரஸதரண மிரகுபதிக்கு(மங்)

கங்கையுதித்திடும் பாதனுக்கு
கரையில்லாத மோதனுக்கு
நங்கைமணிசீதை நாதனுக்கு
நண்ணுமகரத போதனுக்கு
செங்கமலப்பதம் சிரம்வைத்தசத்ய
தேவனுக்குமாகாது பாவனுக்குநித்திய(மங்)

௫. எங்கும்புகழும்ப்ர சித்தனுக்கு
எங்ஙாளும்பரி சுத்தனுக்கு
தங்குமிங்கங்கும்ப்ர புத்தனுக்கு
சந்ததமும்ப்ர மத்தனுக்கு
செங்கமலங்கை சேரும்பதிக்கு
சின்னசாமிதுதி யுன்னதமதிக்கு(மங்)

வசனம்.

இவ்வாறு மதபேதமேயின்றி புருஷர்கள் கொண்டாடிக்கொண்டிருந்ததுமன்றிபெண்களும் அங்கங்குக்கும்புகூடி ஸர்வலோகேசனுகிய ஐயனுக்குச் சோபனம் பாடுதல்.

84 , 85 pages missing in book

பார்த்திவேந்திர னவனைப்பார்த்துப்
பணிந்தெழுந்ததை வாங்கிக்கொண்டு
பூர்த்தியான மனதொடுகுல
புரோகித னனுக்கிரகிக்க. அ

கீர்த்திமிகுந்த கோசலைக்குங்கை
கேசிக்கும்பாதி பாதிதர
ஆர்த்தியடைந்த சுமித்திரையைக்காண
வவளுமிவளும் பாதிதர. கூ

பத்தினிகள்பர மாநந்தமடைந்து
பரிபூரண கர்ப்பந்தரிக்க
சித்திரைமாசந் தவளநவமி
செழிக்கும்கடக புனர்வசுவில். ய

மங்களகோஷ மெங்குமுழங்க
மாஞ்செடிகள் தழைத்திருக்க
கங்கைமுத லெல்லாம்தெளிய
கற்பகத்தரு மலர்ச்சொரிய. கக

அந்தரதுந்துமி யிந்திரனடிக்க
அதனிமுந்துமி யும்முழங்க
திந்திமியென்னும் வாத்யகோஷம்
தேசமெல்லாம்பூரிக்க. கஉ

ஜீவசந்திர யோகத்திலேவர்
திகழ்ந்துச்சத்தி லிருக்கையிலே
தேவரும்பிணி கோசலைதேவி
தேஜோராசியென்றுகாண. கங

அநந்தகோடி யண்டங்களையணு
வாயுள்ளடக்கிக் கொண்டிருக்கும்
அநந்தசயனனும் வுஜனயன
னவதரித்தான் சோபனமே. கச

அந்தவேளை மந்தநகையோ
டருமரகத வண்ணராய்
தந்தகாந்தி யனந்தகோடி
சந்திரகிரணம் போலிலங்க. கரு

சங்கசக்ரகதாபத்ம
சார்ங்ககட்கங் களைத்தரித்து
தங்கவஸ்திரந் தரித்துக்கொண்டு
சதுர்ப்புஜராய்க் குண்டலமும். கசு

அங்கதகிரீடங்களு மணி
யரைஞாணும் கௌஸ்துபமும்
பங்கயபதங்களிற் றண்டைகளும்
பளபளெனத் தரித்துகொண்டு. கஎ

எங்களாண்டவன் வந்ததைக்கண்
டெழுந்தாநந்தக் கண்ணீர்பெருக
மங்களபுள காங்கிதத்தோடு
வணங்கியஞ்சலி செய்துகொண்டு. கஅ

அன்னையான கோசலைபர
மாநந்தக்கூத் தாடிக்கொண்டு
என்னையுனது மாயையணுகா
திருக்கவரந் தாவேணும். கசு

உனதுவயிற்றிலகுமிஜகத்து
மோரணுவாகி யிருக்க
என்றுவயிற்றி லிருந்துவந்த
தென்னபுதுமை சொல்லுமையா. உ0

பக்தபரா தீரனெனும்
பழயவார்த்தை பொய்யாமோ
புத்திமுக்தி யளிக்கப்பரம
புருஷனுய் தரித்தீரே. உக

இப்படியிருந்தா லெனதுபிள்ளையென்
றெப்படிசொல்லலா மெனவே
மைப்படிகண்ணினளுக்கு வரந்தந்து
மானிடக்குழந்தை யாயினரே. உஉ

பூசத்திலு மாயில்யத்திலும்
பூவைகைகேசி சுமித்திரையும்
மாசறுமீன கடகத்திலொளி
மயமாயொன்று மிரண்டும்பெற. உ௩

தாசாதிக ளவதரித்திட
ஜாதகருமஞ் செய்துடனே
ஆசாரியனைக் கொண்டுமன்னவன்
அமிர்தபுஞ்சமா யிருக்கும். க௪

ராமபரத லக்ஷ்மணசத்ருக்கனு
மின்பமாகவேயிருக்க

க்ஷேமமளிக்கும் நாலும்வேதங்களுந்
சிறந்துவளருவதைப்போலே. உரு

பொழுதொருவர்னம் நாளொருமேனியாய்
புத்திரர்நால்வரும் வளரவே
தழுவித்தழுவித் தந்தையுந்தாயாரும்
சந்தோஷங்கொண் டிருக்கையிலே. உசு

பாயசாநு சாரமாகப்
பாலப்பருவ மாதியாய்
மாயனை லட்சுமண னுங்கைகேசி
மகனைச் சத்துருக்கனுமாக. உஎ

அநவரதமு மநுசரித்திட
அரசன்நாலு சுதருக்குள்ளே
எனவாண்டவ னிடத்திலதிக
வின்பமேவி யிருக்கையிலே. உஅ

ஒருநாளந்த மன்னவன்வழக்க
முண்டானவகைப் பூஜித்து
திருவரங்கனுக்கு நைவேத்
தியம்புரிந் துச்சாரமாய். உகூ

இருகதவையுஞ் சாத்திவெளியி
லிருந்து திறந்துள்ளேகிய
மருவிமரைத்தங் கள்குறைந்த
வாறுகண்டு மனமகிழ்ந்து. ௩0

குருவசிஷ்டரைக் கேட்கநானே
கூறுவே னென்றவர்கூற
திருபனதை மறுநாள்பார்க்க
நீலவண்ண னுண்ணக்கண்டு. ௩க

ஆச்சரியங்கொண்டுள் வெளியிலும்
ஆநந்தராமனைக் கண்டனே
மாச்சரிய மில்லாதவசிஷ்ட
மாமுநிவனைக் கேட்கவே. ௩உ

மேதினிபாரம் நீங்கவுதியும்
விண்ணவருங்கூடி வேண்டவே
ஆதிமூலப் பொருளிராம
னிவன்தது பாருமையா. ௩௩

சோதிகோசலை நீருஞ்செய்த
சுகிர்தாசி யாகவே
ஆதிமத்திய மந்தமில்லா
னவதரித்தது பாருமையா. ருச

சேயிழை கைகேசிசுமித்திரை
தேவிகளிடத்திற் சங்கமும்
ஆயிரவாயரவுஞ்சக்கரமு
மவதரித்தது பாருமையா. ருரு

என்றுவசிஷ்டமுனிவனிவ்வா
றியம்பக்கேட்டு மன்னவன்தான்
அன்றடைந்திரு மாந்ததிற்கு
மளவுண்டோபார் சங்கரியே. ருசு

பின்னொருநாளங் கணத்திலெம்
பெருமான்விளை யாடிக்கொண்டு
பொன்னொரு கரததிலிருக்கும்
பூபத்தொடுவரும்போது ருஎ

பொறுமைமிகுந்த ரோமமஹாரிஷி
புகலுமுறையைச் சோதிக்க
மறுவில்லாத புசண்டர்மாமுனி
வரயசுரூப ளுகியே. ருஅ

பக்ஷணத்தினி லாசைகொண்டு
பார்ப்பதுபோ லருகுவர
தக்ஷணமுநிவன் றனையெடுத்து
தாசரதி விழுங்கிடவே. ருகூ

பலகால மிராமமூர்த்தி
பண்டியினுள்ளவன் திரிந்தும்
சிலநாழிகைபோபோலகாட்டி
திரும்பமுநியை யுமிழவே. சுO

புசண்டமாமுனி புன்னகைகொண்டு
போற்றும் புதுமையைப்பார்த்து
நிசமுறையுமென் றையனேதை
நிர்மலமுநிவனுஞ் சிரித்தே. சுக

கண்டதெல்லாஞ்சொல்லவிதிய
காலமளவும் போதுமோ

கொண்டல்வண்ணனே யாடிலுங்கொஞ்சம்
கூறுவேனென்று தொடங்கினான். ௪௨

ஏழுகடலீரேழுபுவனம்
ஏழுசிரஞ்சீவிகளையும்
வாழுமேழுரிஷிகளையும்
வசுமநுக்களையும் பார்த்தேன் ௪௩

மூவராகும்ருதி பாசுபதி
முகுந்த மூர்த்தியையுங்கண்டேன்
தேவர்களு மிராசரிஷிகள்
தேவரிஷிகளையுங்கண்டேன். ௪௪

இந்திரனக்கினி வாயுகுபேரன்
எமன்வருணனையும் பார்த்தேன்
சந்திரசூரியர் குஜபுதகுரு
சனிசுவிராகு கேதுகளும். ௪௫

கந்தருவகின்னர கிம்புருஷ
கருடாதிகளையுங் கண்டேன்
கந்திராவண மூகன்குகனையும்
நாகராசரையும் பார்த்தேன். ௪௬

பக்ஷிநரபசு தருமிருகாதி
பலவும்நால்வகைத் தோற்றமும்
குக்ஷியுளிருக்கக்கண்டேனையா
கோமானேசார்வ பூமானே. ௪௭

இத்தனைகூடியரத மிவ்வண்ணம்போலே
எத்தனையோகண்டதென்னசொல்வேன்
பக்தனையாளு மென்றுதித்து
பணிந்தமுனிவ னேகவே. ௪௮

ஸத்துவகுண நிதியாம்பரதன்
சத்தியம்பிடிக்க லக்ஷ்மணனும்
சத்துருக்கனும் சாமரங்கள்வீச
ஜானகீ சமேதனைய். ௪௯

அங்கதனும் பதங்கதநயனும்
ஆஞ்சனேய விபீஷணரும்
தங்கும்வானர புங்கவர்களும்
ஜாம்பவன்முத லானவரும் ௫௰

வந்தீமாகத பிருந்தங்களும்சு
மந்திராதி மந்திரிகளும்
சந்தித்தாகந்தங்கொண்டெச்சரிக்கை
சாற்றிமோற்றுஞ் சபையிலே ருக

மூர்த்தாபிஷேகம்கொண்டு
முனிவர்தேவ ரியாவரும்
பார்த்தாநந்த மடையபூமி
பாவனஞ்செயும் காலத்திலே ருஉ

நித்தியானந்த னுத்தியான
நிலமேவியொரு நிசியிலே
பத்தியாக ஜானகியோடு
துங்கமணி மயமாகும் ருங

உப்பரிகையிற் சகலசம்பத்தும்
உமக்குங்கோமாள தேசத்திலே
செப்பரிய பரமசுகங்கொண்டு
சேர்ந்திருக்குஞ் சமயத்திலே ருச

இந்துதிகழ மயிலுங்குயிலும்
எதிரெதிராய்க் கூவவே
மந்தமாதரும் மலர்வாசனை
வகித்துவகித்து வீசவே ருரு

அந்தவேளை யமரப்பெண்களும்
அரம்பைபெண்களும் மங்குவர
கொந்தளம்முறு மானவப்பெண்களும்
கூடிச்சோபனம் பாடினரே ருசு

வசிஷ்டமுனியா லுபநீதனுய்
மருவுந்தம்பிய ரோடுகலை
வசிஷ்டமுஞ்சில நாளிற்கிரகித்த
விமலமூர்த்திக்குச் சோபனம் ருஎ

காகிதநய னேதியசேதியால்
கண்டகிதாடகையை வதைத்து
கோதிலாது மகத்தைக்காத்த
கொண்டல் வண்ணனுக்குச்சோபனம் ருஅ

திருவடிகளாலேபிரம
தேவன்மகள்கவிகையை
ஒருநொடியிற் பாவனஞ்செய்த
உத்தமனுக்குச்சோபனம் ருகூ

அடிபடும்போது தோடமருவை
யாகுமென்றலம்பும் வேடனுக்கு

படியில்ஞான பாக்கியமீந்த
பரமனுக்குச் சோபனம். ௬0

மெய்தேகியென் றறிந்தஜெனகன்
வில்லைலீலையா யொடித்து
வைதேகியை மணம்புரிந்த
மாதவனுக்குச்சோபனம். ௬௧

வரும்வழியினிற் பரசுராமன்
மதத்தையடைக்கிச் சேனையுடன்
திருவயோத்தியில் வந்திருந்தனம்
சீதாபதிக்குச் சோபனம். ௬௨

அன்னைவார்த்தை கொண்டுஜானகி
யநுமரொடு வனமேக
தன்னையடுத்த குகனைக்காத்த
தாசரதிக்குச் சோபனம். ௬௩

பரத்துவாச முனியைக்கண்டவர்
பரம்பரைக்கு மனுக்கிரகித்து
துரத்திகாகா சுரனையாண்ட
சுமுகனுக்குச் சோபனம். ௬௪

சித்திரகூட மருங்குவந்து
சேவித்திடும் பரதனுக்கு
பத்திரமாம் பாதுகைதந்த
பரிசுத்தனுக்குச்சோபனம். ௬௫

வாளமீசமுனிவனு மத்திரி
மாமுனிவனும் பூசிக்க
மேன்மையா யனுக்கிரகித்தவேத
வேத்தியனுக்குச் சோபனம். ௬௬

சுபங்கரனுகும் விராதன்
துடித்துவிழ வதைத்துடனே
சரபங்கனுக்கு மோக்ஷமளித்த
சரபங்கனுக்குச் சோபனம். ௬௭

பனிகுலங்களைப் பானுமூர்த்தி
பறக்கச்செய்யும் வகைபோல
முனிகுலங்க ளிடரைத்தீர்த்த
மோகனுக்குச் சோபனம். ௬௮

அதிர்ஷ்டமிதென் றுனந்தங்கொண்
டடிபணிந் தாராதிக்கும்
சதிஷ்ட முனியை யடிமைகொண்ட
சோபனுக்குச் சோபனம். ௬௯

அநத்தியமா யகத்தியமுநி
    யளித்தவில்லாம் பங்கிதரித்து
ஜெகத்திலவனைச் சிறக்கச்செய்த
    தேவபதிக்குச் சோபனம். எ௰

பஞ்சவடியிற் சூர்ப்பநகியை
    பங்கயஞ்செய்து கராதிகளாம
வஞ்சகரைவதைத்து சயம்பெற்ற
    மறைபொருளுக்குச் சோபனம். எக

அடாவென்ற தட்டிராவணன்
    அதறித்துடிக்கப் போராடும்
ஜடாயுவுக்குமோக்ஷமளித்த
    தயாநிதிக்குச் சோபனம். எ௨

நிபந்தனையா யிரண்டுயோசனை
    நீண்டகையுடனே யிருந்த
கபந்தனுக்குஞ் சுபந்தந்தநம்
    கண்மணிக்குச் சோபனம். எ௩

அபரிமிதாந்த சுகத்தை
    யநுபவிக்க வரங்கோரும்
சபரிக்கும் சாயுச்சியமளித்த
    தத்பரனுக்குச் சோபனம். எ௪

தனுமான்கனை யறிந்தவா
    தபனதநய னேவவந்த
அனுமானையு மடிமைகொண்ட
    ஆண்டவனுக்குச் சோபனம். எ௫

காலினாலேதூந்துபி யெலும்பை
    கடத்திமராமேழுந் துளைத்து
வாலியையோ ரம்பினாலே
    வதைத்தவனுக்குச் சோபனம். எ௬

வெட்கிநின்ற சுக்ரீவனுக்கு
    விதம்விதமாய் போதித்து
கிஷ்கிந்தை நகரையளித்த
    கீர்த்திமானுக்குச் சோபனம். எஎ

மங்களகுண சாலிவாலி
    வார்த்தைபடி தாரைமகிழ
அங்கதனுக்கெவ் விராச்சிய
    மளித்தவனுக்குச் சோபனம். எ௮

பால்யமுதற் பக்திபண்ணும்
    பாக்கியம்பெற்ற தம்பியுடன்
மாமயவந்த பருவதத்தினில்
    வசித்தவனுக்குச் சோபனம். எ௯

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

கீர்த்தனை அகராதி.

	பக்கம்		பக்கம்
அகப்பட்டசெனங்களுக்கு	௭௫	சுயோகி	௧௯
அடக்கியாண்டவனே	௩௭	சேவகவேஷம்	௬௭
அவனடிக்கமலம்	௪௨	சேவிக்கமனம்	௩௪
இந்தப்பக்ஷம்	௪௯	சொன்னதென்ன	௭
இந்தராத்திரியில்	௬௯	தாசரய்யா	௫௪
இந்தாரும்	௬௮	தாசரதிகண்	௬[illegible]
இன்னம்பராமுகமா	௨௬	துரையேயென்னை	௭௬
உடனேநடந்ததை	௫௰	நம்பிதிருவடியை	௫௧
உபாயஞ்சொல்ல	௨௮	நம்பினத்திற்கு	௬௨
எங்குமிருக்கிறான்	௭௯	நாராயணா	௨௫
எண்ணினான்	௪௭	நிந்தித்தேன்	௯௩
எந்நாளும்	௨௧	பட்டருக்கேயடிமை	௫௩
எழுந்திரும்	௬௪	பாச்சாமதமிது	௫௮
எனையேனான்	௩௰	பால்யகிருபாலயமாப்	௩௩
என்னமாய்வருமோ	௪௮	பாழுந்தெய்வத்தை	௩௮
என்னையெனக்களி	௩௪	புனராகதா	௩௫
என்வார்த்தை	௭௨	பேசாதிருப்பதே	௩௭
கடனைத்தீர்ப்பது	௬௧	பொன்னடிகதி	௭௪
கடைக்கண்	௫௯	மங்களகவி	௪௫
கட்டுண்டானே	௩௩	மங்களங்களே	௮௨
கபீர்தாஸர்நீரோ	௨௮	மங்களம்ஸ்ரீராமாநு	௫௫
காக்கவரவேணும்	௨௩	மோசம்போனேனே	௩௬
கும்மியடி	௮௫	யாதவப்பிரகாச	௪௬
கூரத்தாழ்வானை	௫௨	ரட்சிக்கவேணும்	௬௪
கோபன்னா	௪௧	ராகவாவீணாகவா	௬
சங்காரஞ்செய்தார்	௫௧	ராமதாசரேராவ்	௪௰
சதாசாரியசரணம்	௧௮	ராதாசரேவாரும்	௮௰
சலாமைய	௮0	இதம்புரியவேணும்	௫௬

கீர்த்தனை அகராதி.

முற்றிற்று.